விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 13 வியாழக்கிழமை (26.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 097

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

# அதிகாரப் பரவலாக்கலுக்கு ஜனாதிபதி மகிந்த இணக்கம்!

## கலைஞருக்கு மன்மோகன் சிங் கடிதம்

(சென்னை)

இலங்கையில் அதிகாரங்களை பரவலாக்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார். உண்மையில் என்ன நடக்கிறது என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டும் என்று தமிழக முதல்வருக்கு எழுதியுள்ள கடிதத்தில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் குறிப்பிட்டுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழரின் நலனைப் பாதுகாக்க இந்திய அரசு முயற்சி மேற்கொள்கிறது

### ராகுல் காந்தி உறுதி

(புதுச்சேரி)

இலங்கைத் தமிழர்களின் நலன்களைக் காப்பதற்கான முயற்சிகளை இந்திய அரசு எடுத்து வருவதாக ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்குத் தலைமை வகிக்கும் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியின் மகனும் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர்களில் ஒருவருமான ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

இளைஞர் காங்கிரஸ் நிகழ்ச்சியில் பங்கேற்க நேற்று புதுச்சேரி வந்த அவர் செய்தியாளர் சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழர் பிரச்சினை முக்கியமானதொன்றாகப் பார்க்கப்படும் நிலையில் தி.மு.க., காங்கிரஸ் என்பன இதை எப்படி சந்திக்கப் போகிறது என அவரிடம் கேட்கப்பட்ட போது, பிரணாப் முகர்ஜி இலங்கைக்கு சென்றிருந்தார் இந்திய அரசு (12ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்து சிங்கள விவசாயிகள் திருமலையில் சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் சேருநுவர பிரதேசத்தில் தெஹிவத்தை வவுனவில கிராமத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 5 சிங்கள விவசாயிகள் கொல்லப்பட்டுள்ளதோடு இருவர் காயமடைந்துள்ளனர். தமது விவசாய நிலங்களில் காவலுக்கு நின்றிருந்த விவசாயிகளே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார். (ச-14)

## "அரசின் பாதுகாப்பு வலயத்தை நம்பியே வேறு எங்கும் செல்லாமல் இருக்கிறோம்"

### ஆனால் அங்கும் ஷெல்கள் வீழ்கின்றன என்கின்றனர் புதுமாத்தளன் மக்கள்

(லண்டன்)

பாதுகாப்பு வலயம் என அறிவித்ததால் தான் நாங்கள் வேறு எங்கும் செல்லாமல் இங்கேயே இருக்கிறோம். இங்கும் ஷெல்கள் வந்து வீழ்ந்த வண்ணமுள்ளது. எங்களுக்கு பதுங்கு குழிகள் கூட இல்லை.

கடற்கரைப் பிரதேசமானதால் பதுங்கு குழி வெட்டமுடியாது. இங்கு காயப்படுவதும் சாவதும் தான் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்வாகிவிட்டது என புதுமாத்தளனில் உள்ள பொதுமக்கள் சிலர் நேற்று பி.பி.சிக்குத் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது, நாங்கள் புதுமாத்தளன் கடற்கரையில் இருக்கிறோம். இங்கு ஷெல்கள் வீழ்கின்றன. படையினர் கிட்டவே நிற்கின்றனர். எமது கண்ணுக்கு எட்டிய தூரத்தில் அவர்களைப் பார்க்க முடிகிறது. (12ஆம் பக்கம் பார்க்க)

## உதயன் அலுவலகம் மீது கைக்குண்டு வீச்சு பொலிஸார் நேரில் சென்று விசாரணை

(யாழ்ப்பாணம்)

உதயன் பத்திரிகை அலுவலகம் மீது நேற்று முன்தினம் நள்ளிரவு 11.10 மணியளவில் இனந்தெரியாதோரால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

உதயன் அலுவலகம் மீது செவ்வாய்க்கிழமை நள்ளிரவு இனந்தெரியாதவர்கள் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தினர். இரவு 11.10 மணியளவில் திடீரென வெடித்த கைக் குண்டினால் பெரும் அதிர்ச்சியும் பதற்றமும் நிலவியது.

கைக்குண்டுத் (12ஆம் பக்கம் பார்க்க)

## கஜேந்திரன் எம்.பியின் சகோதரரைக் காணவில்லை

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனின் சகோதரரான கரவெட்டியைச் சேர்ந்த யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் செல்வராஜா ரவீந்திரன் நேற்று முன்தினம் முதல் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளரான இவர் மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் தற்போது முதுமாணிப் பட்ட கல்வியை தொடர்வதற்காக கொழும்பில் தங்கியிருந்த வேளையிலேயே காணாமல் போயுள்ளார்.

நேற்று முன்தினம் வழமைபோல் பல்கலைக் (12ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய எறிகணைத் தாக்குதலில் 25 சிறுவர்கள் உட்பட 112 பேர் பலி

### மேலும் 210 பேர் காயம்

(வவுனியா)

வன்னியில் வான் மற்றும் தரையூடாக நேற்று நடத்திய கொடூரத் தாக்குதல்களில் 25 சிறுவர்கள் உட்பட 112 தமிழர்கள் உயிரிழந்துள்ளதுடன் 47 சிறுவர்கள் உட்பட 210 பேர் காயமடைந்துள்ளனர்.

அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பு வலய பகுதிகளில் உள்ள மக்கள் வாழ்விடங்கள் எங்கும் நேற்று அதிகாலை தொடக்கம் எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன. இப்பகுதிகளை நோக்கி நேற்று 986 எறிகணைகள் மற்றும் பல்குழல் வெடிகணைகள் ஏவப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (12ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலிகொப்டர்கள் மீது புலிகள் தாக்குதல்

புதுக்குடியிருப்பில் மோதல்களில் காயமடைந்தவர்களை அழைத்துச் செல்ல சென்ற இரு பெல் 212 ரக உலங்கு வானூர்திகள் மீது விடுதலைப்புலிகள் விமான எதிர்ப்பு ஏவுகணைத் தாக்குதல் மேற்கொண்டதாக தேசிய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நேற்று முற்பகல் 11.00மணியளவில் இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. எனினும் அவ் (12ஆம் பக்கம் பார்க்க)

சிறுவர்களை மீட்போம்
சிறுவர் ஆட்சேர்ப்பை நிறுத்து

போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தலைமையதிபதி செயலகம்

unicef

## கனரக ஆயுதங்களால் தாக்குவதால் பெருமளவான படையினருக்கு காயம்

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

ஆட்லெறி மற்றும் ஷெல் போன்ற கனரக ஆயுதங்களைக் கொண்டு விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துவதால் படைத் தரப்பைச் சேர்ந்த பெரும்பாலானோருக்கு காயங்கள் ஏற்படுகின்றன என்று இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

வன்னியில் மிகக் குறுகிய நிலப்பரப்புக்குள் சிக்குண்டுள்ள விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் இருக்கும் பகுதிகளுக்கு ஊடுருவி (12ஆம் பக்கம் பார்க்க)

4R-10 /= மட்டுமே
10X15=75/-

அல்பங்கள், பிலிம் ரோல் போன்றனவற்றையும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். பிரதான வீதி, நெல்லியடி.
(C-2219)

# வன்னியில் இடப்பெயர்வால் பிரிந்திருக்கும் குடும்பங்களைக் கண்டறிய நடவடிக்கை

(கொழும்பு)

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்தமையால் குடும்பங்களை விட்டு பிரிந்தவர்களை கண்டறிவதற்கான செயற்திட்டமொன்றினை முன்னெடுப்பதற்கு சமூக சேவைகள் மற்றும் சமூகநலன்புரித்துறை அமைச்சரும் வடபகுதிக்கான விசேட செயலணிக்குழுத் தலைவருமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களின் உறுப்பினர்கள் வவுனியாவுக்கு வந்த போதும் சிலர் பாதுகாப்பு பிரதேசங்களில் தங்கியுள்ளனர். இவ்வாறு குடும்பங்களை விட்டு பிரிந்தவர்களைக் கண்டறியும் நோக்கிலேயே செயற்திட்டமொன்றினை அமைச்சர் முன்னெடுக்கவுள்ளார் .

தற்போது வவுனியா சென்று அங்கு தங்கியிருந்து வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து இடைத் தங்கல் முகாம்களில் தங்கியிருக்கும் மக்களை பார்வையிட்டு வரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இடம் பெயர்ந்த மக்களுக்குத் தேவையான உதவிகளை செய்யுமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

60 வயதுக்கு மேற்பட்டவர்களை நலன்புரி நிலையங்களிலிருந்து வெளியேற அனுமதிப்பதற்கும் ஊனமுற்றவர்களை அடையாளம் கண்டு அவர்களையும் நலன்புரி நிலையங்களுக்கு வெளியே தங்க அனுமதிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து வவுனியா சென்றிருக்கும் அமைச்சர், கதிர்காமர் கிராமம் மற்றும் பம்பைமடு நலன்புரி நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். (ச-5)

## அதிசய ஆட்டுக்குட்டி



சுன்னாகம் கோடைக்காடு பகுதியில் கடந்த 22ஆம் திகதி பிறந்த ஆட்டுக்குட்டியையே படத்தில் காண்கிறீர்கள். விசித்திரமான உருவ அமைப்புடன் பிறந்த இந்த ஆட்டுக்குட்டி பிறந்த சிலமணி நேரத்தில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. படம்:கோணேஷ்

## ஹொக்கிச் சுற்றுப் போட்டி

யாழ்.மக்கள் வசந்த எழுச்சிப் பேரவையின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கம் நடத்தும் ஹொக்கிச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 27, 30,31மற்றும் ஏப்ரல் 2ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும் நாளைய போட்டியில் பிற்பகல் 3 மணிக்கு வடமராட்சி ஹொக்கி வி.கவை எதிர்த்து உடற்கல்வி வி.கழகமும், பிற்பகல் 3.45 மணிக்கு கோப்பாய் வி.கவை எதிர்த்து சென்ரலைட்ஸ் வி.கழகமும் மோதவுள்ளதாக யாழ்.மாவட்ட ஹொக்கி சங்க செயலாளர் ஆர்.குகன் தெரிவித்துள்ளார். (ச-14)

## உதவிப்பொருள் விநியோகம்

'நிஷா' புயல் மற்றும் மழை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வட்டு.தெற்கு,வட்டு.தென் மேற்குக் கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனம் உணவல்லாத பொருட்களை வழங்கியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை சித்தன்கேணியிலுள்ள மேற்படி நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் வைத்து இப் பொருட்கள் வழங்கப்பட்டதாக நிறுவன வெளிக்கள அலுவலர் ஒருவர் தெரிவித்தார். (ச-49)

# கொழும்பு மற்றும் மாத்தறையில் 29 தமிழ் இளைஞர்கள் கைது

கொழும்பு மற்றும் மாத்தறைப் பகுதிகளில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளில் வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தைச் சேர்ந்த 29 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பின் பல்வேறு பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் விஷேட அதிரடிப்படையினரால் மேற் கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 2 யுவதிகள் உட்பட 10 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த சோதனை நடவடிக்கைகள் கோட்டை, புறக்கோட்டை, வெள்ளவத்தை, கொள்ளுப் பிட்டி, மட்டக்குளி மற்றும் கிராண்ட்பாஸ் ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டது.

இதில் இரண்டு இளைஞர்களைத் தவிர மற்றவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள் என கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். கைதானவர்கள் அந்தந்த பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை மாத்தறை தெனியாயவில் தங்கியிருந்த வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்த 19 தமிழர்களை, தேடுதல் நடவடிக்கை ஒன்றினை மேற்கொண்ட தெனியாய பொலிஸார் கைது செய்துள்ளனர். கடந்த திங்கட்கிழமை தெனியாய பிரதானசந்தியில் அனைத்து வாகனங்களையும் நிறுத்தச் செய்து இந்தச் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டனர். இதன் போது இந்த 19 தமிழர்களும் கைது செய்யப்பட்டு தெனியாய பொலிஸ் நிலையத்தில் சிறைவைக்கப்பட்டுள்ளனர். (ச-5)


## வெளிநாட்டுச் சுற்றுலா

அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டி தாய்லாந்திற்கு (THAILAND) செல்லும் யாழ் மாவட்ட யூனியன் அஷ்யூரன்ஸ் உத்தியோகத்தர்கள்



C.N.மதிவதனன்
REGIONAL MANAGER (RM)






கோவிந்தபிள்ளை சிறீவரதன்
UNIT DEVELOPMENT MANAGER (UDM)



அருமைநாயகம் அன்ரன் ஜெனோசன்
UNIT DEVELOPMENT MANAGER (UDM)



தர்மலிங்கம் குபேந்திரன்
(அகில இலங்கையில் முதலிடம்)
PERSONAL FINANCIAL ADVISOR (PFA)



நவரட்ணம் பிரகாஸ்
INSURANCE ADVISOR (IA)



கதிரவேலு விமலதீசன்
INSURANCE ADVISOR (IA)

வாழ்த்துவோர்
யூனியன் அஷ்யூரன்ஸ்
யாழ்ப்பாணக் கிளை, உத்தியோகத்தர்கள்

(C-2228)

# இன்று ஒரு தகவல்

## பந்திக்கு முந்து

எனக்குத் தெரிந்த ஒருவர் இருந்தார்.

பல கல்யாண மண்டபங்களில் அவரைப் பார்த்திருக்கிறேன். சாப்பாட்டுப் பந்தியில் முதல் ஆளாக உட்கார்ந்திருப்பார்.

"ஏன் இப்படி?" என்று கேட்டால் "பந்திக்கு முந்து!" என்று நம் பெரியவர்களே சொல்லி வைத்திருக்கிறார்களே... அது உங்களுக்குத் தெரியாதா?" என்பார்.

அதைப் பற்றி நானும் யோசித்துப் பார்த்தேன்.

"பந்திக்கு முந்து – படைக்குப் பிந்து" என்று அந்த அர்த்தத்தில் தான் பெரியவர்கள் சொல்லியிருப்பார்களா? விபரம் தெரிந்தவர்களைக் கேட்டேன்.

அதற்கு அவர்கள் கொடுக்கும் விளக்கம் என்ன தெரியுமா?

அந்தக் காலத்தில் ராஜாக்கள் எல்லாம் நான்கு வகையான படைகள் வைத்திருந்தார்கள்.

யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை இந்த நாற்பெரும் படையும் உடைய மன்னன் தான் சிறந்த மன்னன்.

ஒரு ராஜா போருக்குப் போகும் போது இந்த நான்கு வகையான படையும் அணிவகுத்துச் செல்லும். முதலில் யானைப்படையும், அடுத்து குதிரைப்படையும், அதன்பின் தேர்ப்படையும், அடுத்ததாக காலாட்படையும் செல்லும்.

எப்படிப் பார்த்தாலும் முதலில் செல்வது யானைப்படை. நான்காவதாக வருவது தரைப்படை அதாவது காலாட்படை. அந்தக் காலத்தில் போர்ப்பயிற்சி பெற்றவர்கள் அனைவரையும் படையில் வைத்திருப்பதில்லை. தேவைக்கதிகமாக உள்ளவர்களை வீட்டுக்கு அனுப்பி வைத்து விடுவார்கள். அவர்களெல்லாம் வீட்டுக்குப் போய் அவர்களுக்குரிய தொழிலை செய்து கொண்டிருப்பார்கள்.

பகைவர்கள் படையெடுத்து வந்தார்கள் என்றால் போர் ஆரம்பமாவதற்கு அறிகுறியாக போர்ப்பறை முழங்கும். முரசு சத்தம் கேட்கும்.

அச்சத்தம் கேட்டதும் வீட்டில் இருக்கும் வீரர்களெல்லாம் கையில் கிடைத்த ஆயுதங்களை எடுத்துக் கொண்டு நாட்டைக் காப்பாற்றுவதற்காக ஓடி வருவார்கள்.

அப்படி ஓடி வருபவர்கள் படைக்குப் பிந்துவார்கள். அதாவது ஏற்கனவே அணிவகுத்து நிற்கும் யானை – குதிரை – தேர் இந்த வரிசையில் கடைசியாக இருக்கும் காலாட்படையில் போய் நிற்பார்கள்.

அப்படி நிற்கும் போது அந்தக் காலாட் படையில் முதலில் நிற்பதற்கு ஆசைப்படுவார்கள். அதாவது பந்திக்கு முந்துவார்கள்.

அதனால் பந்திக்கு முந்து என்றால் படைவீரர்களை வரிசையில் முன்னுக்குப் போய் நில் என்று அர்த்தம். படைக்குப் பிந்து என்றால் யானை, குதிரை, தேர் இந்த படை அணிவகுப்பில் கடைசியாக இருக்கும் காலாட்படையில் போய் நில் என்று அர்த்தம்.

இதை அனர்த்தம் பண்ணிக்கொண்டு இப்பொழுதெல்லாம் நாம் சாப்பாட்டு பந்தியில் முண்டியடித்துக் கொண்டு நிற்கிறோம்.

நம்ம ஆள் ஒருவர் இந்த விஷயத்தில் நிபுணர். ஒரு கல்யாணப் பந்தியில் எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். தற்செயலாக நான் திரும்பிப் பார்த்தேன். அவர் அழுது கொண்டிருந்தார்.

நான் பதறிப்போய் – "ஏன் சேர் அழுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

"இது அழுகையல்ல ஆனந்தக் கண்ணீர்" என்றார். என்ன விபரம் என்று விசாரித்தேன்.

"நானும் என்னுடைய வாழ்க்கையில் எத்தனையோ கல்யாணப் பந்தியில் சாப்பிட்டிருக்கிறேன்.

ஆனால் இன்று தான் சாம்பாருக்குத் தனியாகவும், இரசத்துக்குத் தனியாகவும் அப்பளம் போடுவதைப் பார்த்தேன். இரண்டு அப்பளத்தை ஒன்றாகப் பார்த்ததும் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டு விட்டேன். அவ்வளவு தான்" என்று சொல்லிக் கொண்டே மேல் துண்டால் கண்ணைத் துடைத்துக் கொண்டார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நல்லூர் பிரதேச செயலகப் பிரிவு

# இலக்கியப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கிய பெரு விழாவை முன்னிட்டு கலாசார அலுவலக திணைக்களம் நடாத்துகின்ற இலக்கியப் போட்டியில் நல்லூர் பிரதேச செயலக மட்டப் போட்டி முடிபுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**கவிதையாக்கம்**

**கனிஷ்ட பிரிவு**

கு. தட்சாயினி – நல்லூர் இ.த.பெ. பாடசாலை, பு. ரிஷிகேசன் – நல்லூர் இ.த.பெ. பாடசாலை, மூன்றாமிடம் இருவர். அ. மதுரிக்கா, க.த.பெ. பாடசாலை, சஞ்சீவன் கொக்குவில் இந்துக் கல்லூரி.

**சிரேஷ்ட பிரிவு**

ப. போஜினி – கொக்குவில் இந்துக் கல்லூரி, ஸ்ரீ. சுஜிபா – இந்து மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் இருவர் – கு. ஜனனி – கனகரத்தின மகா வித்தியாலயம், சி. சிந்துஜா – கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.

**திறந்த போட்டி**

சி. சிவதாசன் – அரியாலை, ஜே. 95, ச. வாகீசன் – இணுவில், ஜே. 115, சோ. ராகுலன் ஜே. 115.

**திறந்த போட்டி - ஆங்கிலம்**

ம. துளசி வந்தனா – நல்லூர் ஜே. 106, க. யோகராசா – அரியாலை ஜே. 95.

**சிறுகதையாக்கம்.**

**கனிஷ்ட பிரிவு**

ச. வித்யா – இந்து மகளிர் கல்லூரி, ஜெ. பவதாரணி – இந்து மகளிர் கல்லூரி, சி. உஷாயினி – இந்து மகளிர் கல்லூரி.

**சிரேஷ்ட பிரிவு**

ஸ்ரீ சுஜிபா – இந்து மகளிர் கல்லூரி, ர. மதுரன் – கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம், செ. பிரதீபா – கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம்.

**திறந்த போட்டி**

து. கணேஸ்வரி – அரியாலை ஜே. 94, சி. சிவதாசன் – அரியாலை ஜே. 95, தி. திலீபன் – கோண்டாவில் ஜே. 119.

**திறந்த போட்டி (ஆங்கிலம்)**

க. யோகராசா – அரியாலை ஜே. 95, ம. துளசிவந்தனா – நல்லூர் ஜே. 106.

**கட்டுரையாக்கம்**

**கனிஷ்ட பிரிவு**

சி. கிஷோத் – இந்துக் கல்லூரி, இ. துஷானி – கொக்குவில் இந்துக் கல்லூரி, தமிழினி – இந்து மகளிர் கல்லூரி.

**சிரேஷ்ட பிரிவு**

க. உஷாந்தன் – யாழ். இந்துக் கல்லூரி, கு. ராதிகா – யாழ். இந்து மகளிர் கல்லூரி, ஞா. பிரதீபா – கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.

**பாடலாக்கம்**

**திறந்த போட்டி**

சிவதாசன் – அரியாலை ஜே. 95, க. குமணன் – அரியாலை ஜே. 91, மூன்றாமிடம் இருவர் வள்ளியம்மை திருநெல்வேலி, ஜே. 110, இ. ஸ்ரீ கஜலட்சுமி – கொக்குவில் ஜே. 123. (ஓ-7)

## "தூய்மையான சிறந்த சூழல்" பாடசாலைகளுக்கிடையேயான போட்டி முடிபுகள்

2008 ஆம் ஆண்டு மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட சிறந்த சூழலைக் கொண்ட பாடசாலைகளைத் தெரிவு செய்யும் போட்டியில் முதலாவது பரிசை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும், இரண்டாவது பரிசை இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையும், மூன்றாவது பரிசை சென் ஜோன்ஸ் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

இதில் இரண்டாவது பரிசைப் பெற்ற இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, 2007 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டியில் மூன்றாவது பரிசைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## இராசி பலன்

*26.03.2009*
*(பங்குனி 13, வியாழக்கிழமை)*
*அமாவாசை முன்னிரவு 10.03 மணிவரை*
*உத்தரட்டாதி பின்னிரவு 6.11 மணிவரை*
*இராகுகாலம் 1.44 - 3.14 மணிவரை*
*சுபநேரம் 7.44-9.14 மணிவரை*
*அமாவாசை விரதம், குழந்தை வேற்சுவாமி குருபூசை, கொக்குவில் மேற்கு மணியார் பதி சிவசுப்பிரமணியர் கொடியேற்றம்.*

| | |
|---|---|
| மேடம் | சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், காரிய அலைச்சல், சுபசெலவு. |
| இடபம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தனதானிய சேர்க்கை, குடும்ப சுகம், சயனசுகம். |
| மிதுனம் | நிலைமாற்றம், தூரதேசச் செய்தி, நன்கொடை, பெரியோரால் மதிக்கப்படுதல். |
| கடகம் | சரீரப் பிரயாசை, வீண்பயம், எதிர்பாராத செலவு, திடீர் பயணம். |
| சிங்கம் | எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், பொருள் விரயம், அஜீரணக் கோளாறு. |
| கன்னி | மனோதைரியம், கீர்த்தி, பிரயாணம், காரிய சித்தி. |
| துலாம் | சுவாரஸ்யம், காரிய நன்மை, ஆரோக்கியம், தொழில் முன்னேற்றம். |
| விருச்சிகம் | அஜீரணக் கோளாறு, காரிய இடையூறு, பணக்குறைவு, குடும்பக் கவலை. |
| தனுசு | மனச் சஞ்சலம், ரோகநிலை, தனவிரயம், முயற்சி தாமதம். |
| மகரம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், கூட்டு முயற்சி, நற்கீர்த்தி, பொருள் சேர்க்கை. |
| கும்பம் | மனோ சங்கடம், போசன சுகக் குறைவு, வேலைச்சுமை, அபகீர்த்தி. |
| மீனம் | வெகுமானம், சிந்தனை மிகுதி, போசன சுகம், மாதர் நட்பு. |

வளவன்

# விண்ணப்பம் கோரல்

**வினைத்திறன் தடை காண் பரீட்சை**

இலங்கை ஆயுர்வேத சேவையிலுள்ள வைத்திய உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடை காண் பரீட்சை ஆயுர்வேத திணைக்களத்தினால் கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர் ஊடாக ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதியின்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவாளர் பரீட்சைகள் பகுதி, ஆயுர்தேவ திணைக்களம், நாவின்ன, மகரகம எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

❖❖❖❖❖

இலங்கையின் வெளிநாட்டுத் தூதரங்களில் ஏற்பட்டுள்ள உள்ளூர் மட்ட அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கான பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதி பெறும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் உள்ளூராட்சி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைகளிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சை வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சார்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

விண்ணப்பதாரி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் *I* அல்லது *II* அல்லது மாகாண சபை அல்லது உள்ளூராட்சி சபை அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் *I* அல்லது *II* இல் இருப்பவராக இருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் *பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, பரீட்சைத் திணைக்களம்,* பெலவத்த, *பத்தரமுல்லை* எனும் முகவரிக்கு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி யன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்குமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை இம்மாதம் 27 ஆம் திகதி வெளியான வர்த்தமானியிலோ அல்லது வலம்புரிக் காரியாலயத்திலோ பார்வையிடலாம். (ஓ-6)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 55 | 60 |
| பச்சைமிளகாய் | 45 | 50 |
| தக்காளி | 20 | 30 |
| அவரை | -- | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 |
| கோவா | 15 | 20 |
| கரட் | 40 | 40 |
| பூசணி | 20 | 30 |
| புடோல் | 15 | 25 |
| வாழைக்காய் | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 35 | 30-35 |
| பெரிய வெங்காயம் | 40 | 40-50 |
| பாகற்காய் | 50 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 50 |
| கரணைக் கிழங்கு | 45 | 40 |
| பயிற்றங்காய் | 30 | 40 |
| லீக்ஸ் | 100 | 120 |
| போஞ்சி | 80 | 100 |
| கீரை – 1 பிடி | 20 | 30 |
| தேசிக்காய் | 140 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30-35 |





சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் 15 வயதுப் பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம், இரண்டாம் இடம்பெற்ற சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அணிகளையும் 17வயதுப் பிரிவில் இரண்டாம் இடம்பெற்ற அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணியினையும் படங்களில் காணலாம். (படங்கள்:-கிருஷ்ணா

## தொழில்நுட்ப பயிற்சிநெறிகள்

நல்லூர் பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்தினால் 2009 ஆம் ஆண்டுக்கான தொழில்நுட்பப் பயிற்சி நெறிகள் வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் தங்கள் பகுதி கிராமசேவை உத்தியோகத்தர்கள் அல்லது பிரதேச செயலகத்தில் விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தரிடம் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னதாக தொடர்பு கொள்ளும்படி நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஓ-30)

## தியானம் பற்றிய விளக்கவுரை

கந்தர்மடம், சிவகுருநாத குருநாதபீட (வேதாந்தமடம்) தியான மண்டபத்தில் நாளை மறுநாள் சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு தியான அறிவைப் பெற்ற பெரியார்களால் தியானம் பற்றிய விளக்கவுரை நிகழ்த்தப்படவுள்ளதால் இந்நிலையத்தில் யோகாசனப் பயிற்சிபெற்ற அனைத்து மாணவர்களும் மற்றும் இவ்விடயம் பற்றி அறிய ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்து பயன்பெறுமாறு குருபீடத்தின் பீடாதிபதி ஸ்ரீமத் வேதவித்தியாசாகர சுவாமிகள் கேட்டுக்கொள்கின்றார். (ஓ

## வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கான வகுப்பு II 'ஆ' பிரிவினரிற்குரிய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையின் செய்முறைப் பரீட்சை இன்றும், நாளையும் காலை 8.30 மணிக்கு கோண்டாவில் பிரதேச வைத்தியசாலையிலும், வாய்மொழிப் பரீட்சை 28 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையிலும் நடைபெறும். இப்பரீட்சைகளிற்குரிய அனுமதி அட்டைகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (ஓ-14)

## பாடசாலைகளுக்கான மின்கட்டண விபரம்

(அல்வாய்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் 02/2009 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் மூலம் வடக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் மாகாண ஆரம்பப் பாடசாலைகளில் அண்மைக்காலமாக மாற்றம் அடைந்துள்ள மின்சார கட்டணம் மற்றும் மின்பாவனை அதிகரிப்பை கருத்திற்கொண்டு மின்பாவனைக்கான கட்டணங்கள் மாற்றியமைக்கப் பட்டுள்ளன. இது தொடர்பான நிதி ஒதுக்கீட்டு விபரம் பின்வருமாறு,

தரம் 1 AB பாடசாலை ரூபா 1500, தரம் 1C பாடசாலை ரூபா 1300, தரம் II பாடசாலை ரூபா 1000, தரம் III பாடசாலை ரூபா 800. (ஓ-4-19)

## கமநல சேவைகள் திணைக்களத்தால் வெள்ள வாய்க்கால் புனரமைப்பு

(பொன்னாலை)

யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தின் நிதியுதவியுடன் வலி. மேற்கு பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட அராலி மத்தி கிராம அலுவலர் பிரிவில் சுமார் 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் வெள்ள வாய்க்கால் புனரமைக்கப்பட்டு வருகிறது.

அராலி மத்தி ஊரத்திக் கிராமத்தில் குமுக்கன் குளத்திலிருந்து குடிமனையூடாக கடற்கரை நோக்கிச் செல்லும் வெள்ளவாய்க்காலே இவ்வாறு புனரமைக்கப்பட்டு வருகிறது.

இதில் முதற்கட்டமாக சுமார் 100 அடி நீளமான வாய்க்காலும், வாய்க்காலுக்கிடையே வீதியில் குறுக்கிடும் இரு மதகுகளும் புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதாகவும் மேலதிக நிதி ஒதுக்கப்படும் பட்சத்தில் மீதி வேலைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனவும் கமநல சேவைகள் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (ஓ-49)

## மஹோற்சவம்

(மாதகல்)

மாதகல் பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தான துவஜாரோகண மஹோற்சவம் நாளை மறுநாள் சனிக்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறும்.

இம் மஹோற்சவத்தில் சித்திரை மாதம் ஐந்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமை கைலாச வாகனத் திருவிழாவும், 6 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும், 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கு தேர்த் திருவிழாவும், 8 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

சங்காபிஷேகம் சித்திரை மாதம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். (ஓ-14)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(வடமராட்சி)

புலோலி மத்தி சதாவதானி முன்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு முன்பள்ளி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் தலைவராக கி.குகநாதன், உபதலைவராக லயன் கா. யோகரட்ணம், செயலாளராக கு.பிரபாகர், உப செயலாளராக தே. வாசுதேவன், பொருளாளராக க.பத்மசாமி மற்றும் ஆறு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஓ-10)

## செயலமர்வு

(அல்வாய்)

தரம் 10, 11இல் கற்பிக்கும் கணித பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிமுதல் 3.30 மணிவரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வுக்கு தரம் 10,11 இல் கல்வி கற்பிக்கும் கணித பாட ஆசிரியர்கள், தரம்10,11 பரீட்சைக்கான கணிப்பீட்டு கைநூலினை தவறாது கொண்டு வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார். (ஓ-4-19)

## இலட்சார்ச்சனையும் சங்காபிஷேகமும்

(யாழ்ப்பாணம்)


கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயிலில் இலட்ச அர்ச்சனையும் சகஸ்ர 1008 சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகி 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் சிவகாமி அம்பாளுக்கு தச தின இலட்ச அர்ச்சனை நடைபெறவுள்ளது. இதில் தினமும் பிற்பகல் 3 மணிக்கு அபிஷேக ஆராதனையும் பிற்பகல் 5 மணிக்கு அர்ச்சனையும் இடம்பெறும்.

10 ஆம் நாளான ஏப்ரல் மாதம் 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு 64 உபசார விசேட பூசை வழிபாட்டுடன் இலட்ச அர்ச்சனை நிறைவு பெறும்.

8 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. பிற்பகல் 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று மாலை 6 மணிக்கு அம்பாளும் ஏனைய பரிவார மூர்த்திகளும் வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.

தொடர்ந்து 9 ஆம் திகதி வியாழக்கிழமை பௌர்ணமி திருவிளக்குப் பூசையும் நடைபெறும் என பரிபாலன சபைத் தலைவர் சி.ஆனந்தராசா தெரிவித்துள்ளார். (ஓ-4)




## யாழ்.செய்திகள்

## குளிர்த்தி அபிஷேகம்

(மருதங்கேணி)

மந்திகை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த குளிர்த்தி அபிஷேகம் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்று காலை அம்மனுக்கு 1008 சங்குகளால் அபிஷேகம் நடைபெற்று விஷேட பூசைகள் இடம்பெறவுள்ளது. (ஓ-35)



சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் அறிவொளி ஒன்றிய அனுசரணையுடன் சாரிக மண்டபத்தில் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் சூசைப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில் ஆலயப் பங்குத்தந்தை யூட் அமலதாஸ் சு.யேசுதாசனுக்கு கூத்திசைப் பாவலன் எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவிப்பதை படத்தில் காணலாம்.(படம்:-சுதாகர்)




சைவ பரிபாலன சபை யால் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தப்பட்ட புண்ணியநாச்சியம்மையார் தின நிகழ்வில், இத் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் கீழ்ப் பிரிவில் முதலிடம் பெற்ற யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவி அருந்ததி சற்குணானந்த சர்மாவுக்கு நிகழ்வில் பிரதம விருந்தி னராகக் கலந்துகொண்ட யாழ்.அஞ்சல் திணைக்கள பிரதேச நிர்வாக உத்தி யோகத்தர் க.புஷ்பநாதன் தங்கப் பதக்கம் வழங்கு வதைப் படத்தில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 105

## ஹெளவரும் தமிழரும்
### உறுதிபெற்ற இனக்குழுக்கள்
### 900–1070

இவனுடைய கல்வெட்டுக்களில் எதுவும் இதுவரை கிடைக்காவிட்டாலும் பிற கல்வெட்டுக்களில் இதுபற்றி மறைமுகமான சான்று உள்ளது.

இலங்கையில் கிடைத்த சில தமிழ்க் கல்வெட்டுக்களில் ஜயங்கொண்ட சாலமேகன் என்ற பெயர் காணப்படுகின்றது. இது அபயஸலாமேகன் என்ற பெயருடன் ஆண்ட ஜயங்கொண்ட சோழ மூவேந்த வேளானைக் குறிப்பதாகவே கொள்ளவேண்டும். அனுராதபுரத்தின் கடைசி மன்னனாக ஆண்ட ஐந்தாம் மஹிந்த மன்னன் ஸிரிசங்கபோதி என்ற பெயரைத் தாங்கியபடியால் அடுத்து வந்த மன்னன் அபயஸலாமேகன் என்ற பெயரைப் பெற உரிமை கொண்டிருந்தான்.

மஹிந்த னுக்குப் பின் முதலாவது ஆட்சியாளனாகப் பழைய சிங்கள அரசில் பதவி பெற்றவன் ஜயங்கொண்ட சோழ மூவேந்த வேளான். ஆகவே அவன் ஸலாமேகன் என்ற சிம்மாசனப் பெயரைப் பெற்றிருப்பான்.

ஜயங்கொண்ட சலாமேகனுக்குப் பின் ஆண்ட சோழ லங்கேஸ்வரன் எவன் என்றோ, சோழர் ஆட்சி முடியும் வரை எத்தனை சோழ லங்கேஸ்வரர்கள் ஆண்டனர் என்றோ கூறச் சான்றில்லை. எனினும் சோழ லங்கேஸ்வரன் என்ற பெயரைக் குறிப்பிடும் இரு கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் ஒன்று ஸிரிசங்கபோதி என்ற சிம்மாசனப் பெயரைப் பெற்ற ஒருவனைக் குறிப்பிடுகின்றது. இவன் ஜயங்கொண்ட சலாமேகனுக்கு அடுத்தவனாக ஆட்சிபுரிந்திருக்க முடியும். வேறு கல்வெட்டுக்களில் விக்கிரம சலாமேகன் என்று ஒருவன் குறிப்பிடப்படுகின்றான். இவன் மூன்றாவதாக ஆண்ட சோழ லங்கேஸ்வரன் எனலாம்.

**வாசகர்களின் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன**

தமிழ்நாட்டில் உள்ள சில கல்வெட்டுக்களில் இலங்கையில் ஆட்சி நடத்திய சில லங்கேஸ்வரர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். முதலாம் ராஜேந்திர சோழன் சபைக்கும் 1019 இல் லங்கேஸ்வரன் ஒருவன் சென்றது பற்றி ஒன்று கூறுகின்றது. இவ்வாறு குறிப்பிடப்படுபவன் ஜயங்கொண்ட சலாமேகனோ என்பது தெரியவில்லை.

ராஜேந்திரசோழனுடன் இணையாக ஆட்சி நடத்திய முதலாம் ராஜாதிராஜன் ஒரு சோழ இளவரசனை லங்கேஸ்வரனாக முடிசூட்டி இலங்கைக்கு அனுப்பி வைத்தான். ராஜாதிராஜன் காலத்தில் இலங்கையில் ஸிரிசங்க போதி என்ற சிம்மாசனப் பெயருடன் ஆண்ட சோழ லங்கேஸ்வரன் இவனாக இருக்கலாம்.

### சோழர் ஆட்சி

இதுவரை கூறப்பட்ட நிகழ்ச்சிகளின் அடிப்படையில் இலங்கையில் சோழர் ஆட்சிக்கால வரலாற்றை ஓரளவு ஒழுங்கு படுத்தி உரைப்போமாயின் பின்வருமாறு கூறலாம். சோழர் ஆட்சி தமிழ்நாட்டிலிருந்து நடைபெற்று ஒரு தாக்குதலுடன் தீவு முழுவதும் ஏற்பட்ட ஆட்சி ஆகாது. அது படிப்படியாகப் பல கட்டங்களில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிப் பரவிய ஆட்சியாகும்.

ஏற்கனவே பல்லவர் பேரரசுக் காலத்தில் தமிழர் ஆதிக்கம் மிகுந்த இடமாகக் காணப்பட்ட வடக்கிலும், வடகிழக்கிலும் முதலாம் பராந்தக சோழன் காலத்தில் சோழர் ஆதிக்கம் பெற்றனர்.

வடக்கு–வடகிழக்குப் பிரதேசத்திலி ருந்து முதலாம் ராஜராஜசோழன் காலத்தில் அனுராதபுரத்தையும் கைப்பற்றி, அனுரா தபுர அரசின் பெரும்பாகத்தில் சோழர் ஆட்சி ஏற்பட்டது.

அடுத்து 1017 இல் ராஜேந்திர சோழ னின் படையெடுப்புடன்,தெற்கு இலங்கை வரை சோழப் படைகள் சென்று அங்கு அபயம் பெற்றிருந்த அனுராதபுரத்தின் கடைசி மன்னனையும் குடும்பத்தினரையும் செல்வங்களையும் கைப்பற்றின. இதன் விளைவாக ஈழமண்டலம் முழுவதும் கைப் பற்றப்பட்டதாகச் சோழர் கருதினர்.

மும்மடி சோழ மண்டலம் என்ற பெயருடன் பேரரசுடன் இணைக்கப்பட்ட இலங்கையை நிர்வகிக்கச் சோழ இளவரசர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்கள் சோழ –லங்கேஸ்வரன் என்ற பெயரைத் தாங்கித் தனி மன்னர்கள் போல ஆட்சி நடத்தினர்.

பொலநறுவை யில் அமைந்திருந்த ஜனநாதமங்கலம் என்ற பிரமாணக் குடியிருப்பு ஜனநாதபுரம் என்ற பெயரைப் பெற்று, சோழர் ஆட்சி பீடமாகியது.

முதலாவது சோழ ஆட்சியாளனாக ஜயங்கொண்ட சோழ மூவேந்த வேளான் ஜயங்கொண்ட சலாமேகன் என்ற பெயருடன் நிர்வாகம் நடத்தினான். அவனுக்குப் பின் சோழ– லங்கேஸ்வர சங்கபோதிவர்மனும், அவன் பின் விக்கிரம சலாமேகனும் நிர்வாகம் நடத்தினர்.

முதலாவது சோழ லங்கேஸ்வரன் பெயரால் ஜயங்கொண்ட சலாமேகச் சதுர் வேதி மங்கலம் என்ற பிராமணக் குடியிருப்பு ஒன்று அக்காலத்தில் இருந்தது. விக்கிரம சலாமேகன் பெயரால் விக்கிரமசலா மேகபுரம் என்ற ஒரு நகரமும், விக்கிரமசலா மேக ஈஸ் வரம் என்ற ஒரு சிவன் கோவிலும், விக்கிரம சலாமேகத் தெரிந்தவலங்கை வேளைக்காரர் என்ற ஒரு படைப் பிரிவும் இருந்தன.

சோழ– லங்கேஸ்வரனைத் தலைவனாகக் கொண்ட சோழ நிர்வாக அமைப்பில் முழு மண்டலமும் தமிழ்நாட்டிற் போல் வள நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுக்குச் சோழ மன்னர் பெயர்கள் வழங்கப்பட்டன. இவற்றுள் பெரும்பாலானவை ராஜராஜசோழனின் பல்வேறு பெயர்களைப் பெற்றிருந்தன.

பேராசிரியர்
கா. இந்திரபாலா

கல்வெட்டுக்களால் அறியப்படும் வளநாடுகளாவன: ராஜராஜ வளநாடு, அருமொழி தேவ வளநாடு, நிகரிலி சோழ வளநாடு,ராஜேந்திர சிங்க வளநாடு, விக்கிரம சோழ வளநாடு, அபயாஸ்ரய வளநாடு, பரகேசரி வளநாடு.

இவற்றுள் ராஜராஜ வளநாடும் விக்கிரம சோழ வளநாடும் கிழக்கிலங்கையில் திருகோணமலையைச் சூழ்ந்த பிரதேசத்தில் இருந்தன. வளநாடுகள் நாடுகளாகப் பிரிக்கப்பட்டன. நாடுகளில் மிகச் சிறிய பிரிவாகிய ஊர்கள் இருந்தன . (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா
# அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை 25



சரி பின் அது மணமுறிவில் போய் முடிந்த போதும் சரி அவர்கள் ஒருவரையொருவர் நேசித்தனர். நல்ல புரிந்துணர்வு இருந்தது. அவருக்கு கல்லீரலில் நோய்கண்டது. ஒபாமாவின் தாய் அவருக்கு கலிபோர்ணியாவில் வைத்தியம் செய்ய ஒழுங்குகள் செய்து கொடுத்தார்.

அவர் வந்தபோது ஒபாமா அவரைத் தாயுடன் சென்று பார்த்தார். அதாவது ஒபாமா இந்தோனேசியாவை விட்டு வந்து பத்து வருடங்கள் கழித்து முதல் முறையாக அவரைப் பார்க்கிறார். லோலோவின் வருத்தம் குணமடையாமல் மோசமடைந்து ஈற்றில் தனது ஐம்பத்தொராவது வயதில் உயிர் துறந்தார்.

ஒபாமாவின் தாய்க்கு ஒன்றும் புரியவில்லை. பாதுகாப்பான வாழ்வை அடைய இவ்வளவு துன்பமும் துரோகமும் நிறைந்த கரடுமுரடான பாதையூடாகவா செல்லவேண்டும்? மிகுந்த கவனமில்லையென்றால் சறுக்கி தலைகீழாக விழவேண்டி ஏற்படுமே என்று விசனப்பட்டார்.

அவளுக்கு லோலோ கூறியவை சரியாகவே பட்டது. அவள் வெளிநாட்டவர். அமெரிக்கர். அவளின் பாரம்பரியம் அவளை எப்போதும் காப்பாற்றும்.அவளின் வாழ்வு குழம்பிப் போனால் எந்நேரத்திலும் நாட்டை விட்டு

ஜம்பொன்

அகல முடியும். இப்படியும் நிகழலாம் என்பதே கணவன்–மனைவிக்கிடையில் இருந்த பூதாகரமான தடைச்சுவர் ஆகும்.

அம்மாவும் அவரும் கடைசி வரையும் நல்லுறவோடுதான் வாழ்ந்தார்கள். அம்மா அவரைப் பிரிந்து அமெரிக்கா சென்ற போதும் நெருப்பில் காய்ச்சிய கத்தியால் தோண்டியெடுக்க வேண்டும்... அவ்வாறு எற்பட்ட புண்களின் தழும்புகளைத் தான் ஒபாமா கண்டார்.

ஒபாமா தன் கையால் தழும்புகளை தடவிப் பார்த்தார். தோல் மெல்லியதாக எரிந்து மயிர்களற்று இருந்தது.

நல்லாக நொந்திருக்குமல்லவா? ஒபாமாவே அந்த வேதனையை தனதாக்கிக் கொண்டார். லோலோ விளையும் பயிருக்கு தத்துவ நீர் பாய்ச்சினார். நோகத்தான் செய்தது. ஆனால் சிலவேளைகளில் நாம் நோவைத் தாங்கிக் கொண்டு போகவேண்டிய இலக்கை அடைய முன்னேற வேண்டும் என்றார்.லோலோவை தன் கடைக் கண்ணால் பார்த்தார் ஒபாமா. ஒரு நாளும் லோலோ தன் உணர்வுகளை வெளிப் படுத்தியதில்லை. கோபப்பட்டோ துக்கப்பட்டோ கண்டதில்லை. ஒபாமா தன் பின் வாழ்வில் படிக்கப் போகும் பாடங்களை இக் கூற்றுகள் பிரதி பலித்தன.

வாழ்க்கை என்ற செயல்களத்தில் சுக துக்கங்கள் போன்ற உணர்ச்சிகளை நாம் எதிர் கொண்டேயாக வேண்டும். குளிர் – சூடு , இன்பம்–துன்பம் அந்த இரட்டைகளை யாரும் தவிர்க்கமுடியாது.

ஆனால் அவை வந்து போகும் தன்மையானவை. யாரைப் பதற் றத்திற்கு உள்ளாக்குவதில்லையோ, யார் சுக துக்கங்களை சமமாகக் கொள்பவரோ, யார் விவேகியோ அவன்தான் மரணமிலாப் பெரு நிலைக்குத் தகுதி வாய்ந்தவன் ஆகிறான். ஒபாமாவின் வாழ்வுக்கு வரைவிலக்கணம் வகுத்ததாகிவிட்டது. அவை அவருக்கு வழிகாட்டியாக நின்றுதவும்

அடுத்து ஒபாமா ஏதோ மனதில் தோன் றிய ஒன்றைக்கேட்டார்.

அவர் எப்போதாவது யாரும் கொலை செய்யப்படுவதை பார்த்துள்ளாரா? இக் கேள்வி லோலோவை உலுப்பிவிட்டது. அமைதியாக இருந்துவிட்டார். மீண்டும் அதே வினா. விடாக் கண்டனிடமிருந்து 'ஆம்' 'பயங்கரமாக இருந்ததா?' 'ஆம்' 'நீங்கள் கண்ட மனி தனை ஏன் கொன்றார்கள்?' 'அவன் பலவீன மானவன். ஆகையால்தான்' 'அவ்வளவுதானா'

## மனிதன் தன்னிலும் பலவீனமானவனை தனக்குச் சாதகமாக்கிக் கொள்வான்

### ஒபாமாவுக்கு நடந்த தத்துவப் போதனை

லோலோவின் கணுக்காலிருந்து முழங்கால் வரை அடையாளங்கள் இருந்தன. ஒபாமாவுக்கு அது பற்றி அறிய ஆவல். அதனை வெளிப்படுத்தினார். லோலோ இந்தோனேசியாவின் படையில் சேர்ந்து நியுகினியில் கட்டாய சேவையில் ஈடுபட்டிருந்தபோது சதுப்பு நிலங்களூடாக நடந்து செல்ல வேண்டியிருந்தது.

அங்கு மலையட்டைகள் காலில் ஏறி தொடையில் கடித்து இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும். பின் சதையினுள் புகுந்து ஒட்டிக்கொள்ளும் அவற்றைப் போக்க

மனிதன் தன்னிலும் பலவீனமானவனை தனக்குச் சாகதமாகப் பயன்படுத்துவான். இந்த விடயத்தில் அவனைப் போலத்தான் நாடுகளும் கடைப் பிடிக்கின்றன. பலமுள்ள வன் பலமற்ற வனின் காணி நிலங்களை தனக்கென எடுத்துக்கொள்வான்.

இந்த இரண்டு வகைகளில் நீ எதைச் சேர்ந்தவனாக இருக்க விரும்புகிறாய்? எப்போதும் பலமுள்ளவனாக இருப்பது நல்லது.உன்னால் அது முடியாது என்றால் சாதுரியம் உள்ளவனாக இருந்து கொண்டு பலசாலியாக உள்ளவர்களுடன் கூட்டணி வைத்துக்கொள்ள வேண்டும். (தொடரும்)

# தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிலுநர்களை சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை

தேசிய கல்வியியிற் கல்லூரிகளுக்கு 2009 ஆம் ஆண்டிற்கான புதிய பயிலுநர்களைத் தெரிவு செய்தவற்கென யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது. அழைப்புக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

இதில் சித்திரம், மனைப் பொருளியல், முதன் மொழி,ஆரம்பக் கல்வி ஆகிய பாடத் துறைகளுக்கு அழைக்கப்பட்டுள்ள மாண வர்களின் விபரம் வருமாறு,

**சித்திரம்**

எஸ்.வாகீசன்-இணுவில்கிழக்கு,கே.பிரகாஸ் -நீர்வேலி மேற்கு,எஸ். சிந்துஜா-உதயசூரியன் வீதி, உடுவில், பி.நதியா- அச்சுவேலி தெற்கு, கே.தபேந்திரன்- தவசிகுளம், மிருசுவில், எஸ்.சோபனாராஜ்-சுதுமலை கிழக்கு,மானிப் பாய், எஸ். உணகரன்-உடுவில் கிழக்கு, கே.யாழ்வேந்தன்-வளலாய், அச்சுவேலி, பி.நிஷாந்தன்- முதலாம் வட்டாரம்,புங்குடு தீவு,எஸ்.நிஷாந்-புத்தூர் வடக்கு,எம். கிருப சேனன்-இணுவில் மேற்கு, சுன்னாகம்,எஸ். பிரதீபன்-நல்லூர் வடக்கு,யாழ்ப்பாணம், வி.விஜிதரன்-இணுவில்கிழக்கு, எஸ்.கஜந்தன்- உடுவில் தெற்கு, ஏ.விஜிதரன்- சுழிபுரம், ஏ.கெங்காகரன்-கல்வயல்,சாவகச்சேரி.

**மனைப்பொருளியல்**

எஸ்.ரேணுகா-நுணாவில்மேற்கு, சாவகச்சேரி,ரி.சங்கீதா-இணுவில்கிழக்கு, ஏ.யாழினி-நாவலர்வீதி,யாழ்ப்பாணம், கே. றோகினி-சங்கானைவீதி, அச்சுவேலி, பி.ஜோஜினா-நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி, வி.அனிதா-கொற்றாவத்தை,வல்வெட்டித் துறை,எஸ்.சுஜிதரா-முள்ளிவீதி,அரியாலை, எம்.சோபிகா-கரம்பொன் கிழக்கு, எஸ். கஜேந்தினி-அராலி வடக்கு,கே.நிக்ஷா- கொக்குவில் கிழக்கு, ஐ.குகேந்திரன்- சண்டி லிப்பாய் வடக்கு,மகியப்பிட்டி,ஆர்.நிஷா- இணுவில் கிழக்கு,என்.சர்மிளா-புத்தூர்மேற்கு, கே.ரட்ணசபாபதி சர்மா-புலோலி தெற்கு, ரி.கஜேந்திரராஜினி-பிரான்பற்று பண்டத் தரிப்பு,எம்.கோமளா-நாவலடி, உடுப்பிட்டி, எஸ்.லாவண்ஜா-சுதுமலை மேற்கு, மானிப் பாய்-ஆர்.சத்தியஜெயந்தி-ஆனைக்கோட்டை, எல்.நல்லதம்பி-இளவாலை வடக்கு,ஜே. மேனகா-சுன்னாகம் கிழக்கு, ஏ.விஜேந்தி- சங்கத்தானை,கே.பாமினி-அளவெட்டி தெற்கு, ஜே.ஜோன்கில்பேட்-நாரந்தனை வடக்கு, பி.கலைவாணி-கந்தரோடை,சுன்னாகம் , எஸ்.கௌசல்யாதேவி-புலோலி மத்தி, பருத் தித்துறை,எஸ்.பிரதீபா-சண்டிலிப்பாய் கிழக்கு, கி.றொசானி-மகியப்பிட்டி, சண்டிலிப்பாய், எஸ்.அனுஜா-கோப்பாய் மத்தி, கே.கமலச் செல்வி-நுணாவில்மேற்கு, எஸ். தஷ்யா- ஐயனார் வீதி,சண்டிலிப்பாய், இ.ரூபினி- கரம்பொன் கிழக்கு,ஊர்காவற்றுறை, ரி.விக் னேஸ்வரி-இலக்கமாவத்த,உடுப்பிட்டி, எஸ். நளினி-அராலி தெற்கு, வட்டுக்கோட்டை, என்.மேகலை-புலோலி கிழக்கு, பருத்தித் துறை,எஸ்.பவானி-தும்பளை பருத்தித்துறை, ஆர்.வாசுகி-அச்செழு வடக்கு,நீர்வேலி, டி.சற்குணராஜா-இராசாவின்தோட்டம்,யாழ்ப் பாணம்,ஆர்.அகல்யா-தும்பளை, பருத்தித் துறை,ஏ.கலைவாணி-ஏழாலை தெற்கு, ஆர்.கயல்விழி-புலோலி தெற்கு, எஸ்.விஜிதா- கந்தரோடை மேற்கு,சுன்னாகம், வி.அபிராமி- அராலி மேற்கு,வட்டுக்கோட்டை, ஜே.ஜி.ஏ. நிரோஷா-சில்லாலை வடக்கு, பண்டத்தரிப்பு, எச்.ஜி.அகிர்தா-குருசோல்ட் வீதி,யாழ்ப்பாணம், கே.தயாளினி-அராலி மத்தி வட்டுக்கோட்டை, எஸ்.ஜெயசொரூபி-சண்டிலிப்பாய் வடக்கு, சி.மஜீபன்-கந்தரோடை,சுன்னாகம்,ரி.கலைச் செல்வி-பூதராஜர் ஒழுங்கை, பருத்தித்துறை, எஸ்.பிரதா-உரும்பிராய் கிழக்கு,ஐ.சிவரூப தர்சினி-அராலி தெற்கு வட்டுக்கோட்டை.

**முதல் மொழி தமிழ்**

எஸ்.வாகீசன்-இணுவில் கிழக்கு, யாழ்ப் பாணம், ஏ.சோபனா-உடுவில், சுன்னாகம், என்.சத்தியா-மந்துவில் வடக்கு, சுன்னாகம், எம்.அமிர்தா-சங்குவேலி தெற்கு,மானிப்பாய், வி.தர்சினி-சில்லாலை கிழக்கு, பண்டத்தரிப்பு, வி.விநாயகமூர்த்தி- துன்னாலை மத்தி, கரவெட்டி,பி.சிற்றிகா-ஆறுகால்மடம்,ஆனைக் கோட்டை, ரி.கோகுலராம்-கந்தர்மடம், ரி. தாரணி- வியாபாரிமூலை, பருத்தித்துறை, பி.சூரியகலா- திருநெல்வேலி கிழக்கு, எஸ். மயூரி-இமையாணன் கிழக்கு,உடுப்பிட்டி, ரி. கலைச்செல்வி-ஆனைக்கோட்டை, யாழ்ப் பாணம், வை.கர்ஷினி- ஐயனார் கோவிலடி, கொடிகாமம்,எஸ்.ஜீவிதா-வண்ணார்பண்ணை மேற்கு, என்.விஜயரத்தினம்-புலோலி மேற்கு, பருத்தித்துறை,பி.ரஜிந்தன்-வேலணைகிழக்கு, எஸ்.சுபதீஸ்-மீசாலை வடக்கு கொடிகாமம், என்.அனுயா-சுழிபுரம் வடக்கு,சுழிபுரம், பி.கேமினி-கந்தரோடை மேற்கு,சுன்னாகம், ஏ.கஜனி-சாவகச்சேரி, பி.மயூரன்-சுதுமலை தெற்கு,மானிப்பாய், எஸ்.நிலானி-மீசாலை மேற்கு,மீசாலை, வி.சதாசிவம்-களபூமி, காரை நகர், ஆர்.நிலக்ஷனா- உரும்பிராய் வடக்கு, உரும்பிராய், ரி.ஞானகிரி-கோண்டாவில்மேற்கு, கோண்டாவில், பி.சுகந்தி-பொலிகண்டி, வல் வெட்டித்துறை, எம்.சங்கீதா-காஞ்சிபுரம், மாதகல்,என். சசிகரன்-தெல்லிப்பளை கிழக்கு, தெல்லிப்பளை, எஸ்.ரூபினி-புலோலி மத்தி, பருத்தித்துறை,பி.அனுசிகா- திருநெல்வேலி, எஸ். ஸ்ரீலதா-கொழும்பு-06,ரி.சுகிர்தா- நெடுந்தீவு தெற்கு,எம்.ஏ.வினோராஜ்-கீரி, மன்னார், பி.கரிகாலன்-கோண்டாவில் மேற்கு, கோண்டாவில், ரி.பிரின்சியா-சர்வோதயா வீதி, அச்சுவேலி தெற்கு,எஸ்.பிறேமலதா-கோண் டாவில்மேற்கு, கோண்டாவில்.

**ஆரம்பக்கல்வி**

ஏ.சோபனா-உடுவில்,சுன்னாகம், ஜே.ரி. மேரிநிலோஜினி-, வெற்றிலைக்கேணி, முள்ளியன்,என்.சத்தியா-மந்துவில் வடக்கு, கொடிகாமம்,எம்.அமிர்தா-சங்குவேலி தெற்கு, மானிப்பாய், வி.தர்சினி-சில்லாலை மத்தி, கரவெட்டி,பி.சிற்றிகா-ஆறுகால்மடம்,ஆனைக் கோட்டை,ரி.தாரணி-வியாபாரிமூலை,பருத் தித்துறை,பி.சூரியகலா-அம்மன் வீதி, திருநெல் வேலி கிழக்கு, எஸ்.மயூர்-இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி, வை.கர்சினி-ஐயனார் கோவிலடி, கொடிகாமம், எஸ்.ஜீவிதா-வண்ணார் பண்ணை மேற்கு,எஸ்.பாலரமணன்-மானிப் பாய் வடக்க,பி.சுபித்திரா-பொன்னாலை மேற்கு,சுழிபுரம்,என்.விஜயரட்ணம்-புலோலி மேற்கு, பருத்தித்துறை, பி.றஜிந்தன்- வேலணை கிழக்கு,எஸ்.சுபதிஸ்,மீசாலை வடக்கு,கொடிகாமம், பி.கேமினி-கந்தரோடை மேற்கு,சுன்னாகம், ஏ.கஜனி,சாவகச்சேரி, பிமயூரன், சுதுமலை மேற்கு, மானிப்பாய், எஸ்.நிலானி-மீசாலை மேற்கு,வி.சதாசிவம்- காரைநகர், ஆர்.நிலக்ஷனா-உரும்பிராய் வடக்கு,ரி.ஞானகிரி-கோண்டாவில் மேற்கு, வி.லிமா- அல்வாய் கிழக்கு,ரி.சுரேகா-நாவற் குழி கைதடி, பி.சுகந்தி-பொலிகண்டி, வல்வெட் டித்துறை. (7 ஆம் பக்கம் பார்க்க)

# ஆரோக்கியத்தை பாதுகாப்பதற்கு இயற்கையோடு இயைந்து வாழப் பழகிக் கொள்ளுங்கள்!


வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பிக்க இருக்கும் குழந்தைகள்,சிறிது தூரம் பயணித்த இளைஞர்கள் என தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் எதிர்காலப் பரம் பரையை இயற்கையோடொட்டிய நமது கலாசார, பண்பாடுகளிற்கமைய வாழ வழிகாட்டி, ஆரோக்கிய சமூகத்தை எதிர்காலத் தில் கட்டி எழுப்புவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

'' கீழே விழுந்தவனை மாடு மிதித்தாற் போல'' பல்வேறுபட்ட சவால்களிற்கிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய சமூகத் தின் பெரும் சவாலாக புதுப்புது நோய்கள் உருவெடுத்துள்ளன. உண்மையில் இதற்குக் காரணம் என்ன? ஆராய்ந்தால் தவறான உணவுப்பழக்கங்களும், தவறான வாழ்க்கை முறைகளும் தான் காரணம் என்பது தெளிவா கும். ஆம் ! மருந்துகளிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் மக்கள் வாழ்க்கை முறைக்கோ, உணவுப் பழக்கவழக்கத்திற்கோ முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்பது வேதனைக்குரிய உண்மையாகும்.

உண்மையில்" ஆரோக்கியம் (Health) " என்பது தனிமனிதனது அடிப்படை உரிமை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். உணவுக் காக, உடைக்காக, உறையுளிற்காக,வேறு எவற்றிற்காகவெல்லாமோ குரல் கொடுக்கும், போரிடும் சமூகத்தினர் ஆரோக்கியத்தினை பேணுவதற்காக எத்தனை பேர் குரல் கொடுக் கின்றனர்? முயற்சிக்கின்றனர்?

வைத்தியர்களும் வைத்தியசாலைகளும் ஏன் உருவாக்கப்பட்டன? நோய் தீர்த்தல், நோய் தடுப்பு, நோய்கள் பற்றிய விழிப்புணர் வினை பொதுமக்களிற்கு ஏற்படுத்துவதற் காக. அதாவது நோயாளிக்காக. "நோயாளி" (Patient) எவ்வாறு உருவாகின்றான் என்பதை சற்று சிந்தித்து பாருங்கள். நோயாளி இல்லை எனில் வைத்தியர்களிற்கும் வைத்தி யசாலைகளிற்கும் தேவை இருக்காது என்ப தும் அப்போது உங்களிற்குப் புரியும்.

வார்த்தைகளிற்காக நான் குறிப்பிட




வில்லை. ஆறு அறிவு மனிதனிற்கு உண்டு எனக் கூறிக்கொள்ளும் நம்மில் எத்தனை பேர் ஆறாவது அறிவைப் பயன்படுத்து கிறோம்? பொதுமக்களாகிய நீங்கள் ஒவ்வொரு வரும் உள்ளார்ந்த கௌரவத்துடனும், மதிப் புடனும், பெறுமதியுடனும் அனுபவிக்க வேண்டிய முக்கிய அடிப்படை உரிமை தான் ஆரோக்கியம்/ சுகாதாரம் என்பதை நன்கு புரிந்துகொள்ளுங்கள்.

உங்கள் அனைவரிற்கும் ஆரோக்கியமான வாழ்வை வாழ்வதற்கு விருப்பம் இருக்கின்ற தல்லவா? மனித ஆரோக்கியம் என்பது உடல், உள காரணிகளுடன் சமூக, ஆன்மீக காரணி களில்தான் முக்கியமாக தங்கி இருக்கின்றது. எனவே இயந்திர மயமான சூழ்நிலை, ஓய்வற்ற தொடர்ச்சியான வேலை, முரண்பாடான சமுதாயத் தொடர்புகள் என்பவற்றிலிருந்து விலகி தியானம் (Meditation), யோகாசனம் (Yogasan), வாழும் கலைப்பயிற்சி (Art of living),வன்முறையற்ற தொடர்பான கலை (Non Violent Communication) போன் றவற்றை சில நிமிடங்களில் ஆரம்பித்து மணித்தியாலங்கள் வரை பயிற்சிப்பதன் மூலம் மன அழுத்தங்களிலிருந்து விடுபடு வதற்கும் தப்பிப் பிளைப்பதற்கும் பழக்கப் படுத்திக் கொள்வதுடன் நல்லுறவை மேம் படுத்தவும் முடியும். மருந்து, புதிய தொழில் நுட்ப வளர்ச்சிகள் மூலம் ஆரோக்கிய வாழ்வு கிடைக்கும் என்ற "போதை" நிலையிலிருந்து விடுபட்டு இயற்கையான வாழ்வின் சூட் சுமத்தை உணர்ந்து "இயல்புநிலைக்கு" மீள் வதுடன் அதன்மூலம் நல் ஆரோக்கியத்தை முன்னெடுக்க முடியும். இதற்கான வழி முறைகள் சில,

- காலை எழுந்தவுடன் 2/3 குவளை கொதித்து ஆறிய நீரை அருந்துங்கள்.
- கோப்பி,தேநீர் அருந்துவதை தவிருங் கள்.
- தினம் 30 நிமிடம் யோகப் பயிற்சிகளை (யோகா=தியானம்+ ஆசனங்கள்) (Yoga= Meditation +Asanas) பயிற்றுவிப் பாளரின்/ மருத்துவரின் ஆலோசனைப்படி செய்யுங்கள் அல்லது 30-60 நிமிட நேரம் சுறுசுறுப்பாக நடவுங்கள்.
- தினமும் குறைந்தது 3L கொதித்து ஆறிய நீர் அருந்துங்கள்.
- இயற்கை உணவு வகைகளை (பழங்கள், பச்சை காய்கறிகள், முளைக்க வைத்த பயறுவகை) நன்கு கழுவி உண்ண பழக்கப் படுத்திக் கொள்ளுங்கள்.
- உணவை அவசரமாக சாப்பிடாமல் ஆறுதலாக உண்பதோடு முடிந்தவரை குடும்பத்தினர் அனைவரும் நேரம் ஒதுக்கி ஒன்றாக உண்ணுங்கள்.
- ஒவ்வொரு நாளும் ஒரே வித உணவு வகைகளை உண்ணாது தினசரி அவசிய மான,போஷாக்கை பரிபூரணமாகக் கொண்ட உணவுகளை பல விதங்களில் செய்து உண்ணுங்கள்.போஷாக்கு உணவு பற்றி பொது சுகாதார மாது,சுகாதார வைத்தியர்கள், வைத்தியசாலை வைத்தியர்கள், போஷணை யாளர்கள் (Dietatician) இடம் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.
- எண்ணெயில் செய்த உணவுகளை தவிர்த்து வேகவைத்த உணவுகளையே உண்ணுங்கள்.
- உணவுடன் தேவையான அளவு உயிர்ச் சத்துக்களும்,கனியுப்புக்களும் உள் ளெடுக்கப்படுவதை உறுதி செய்துகொள் ளுங்கள்.
- செயற்கை உணவு வகைகள்,பாணங்கள் (Carbonated drinks) ,தகரத்திலடைக்கப்பட்ட சமைத்த உணவுகள்,மதுபானம் பாவித்தல் என்பவற்றைத் தவிருங்கள் அல்லது மது பானத்தை சிறிதளவில் வைத்திய ஆலோ சனையின்படி பாவியுங்கள்.

**Dr.S.குமுதினி,**
பொதுசுகாதார ஆயுள்வேத வைத்திய அதிகாரி,
வடமராட்சி தெற்கு, மேற்கு

- உணவு உண்பதற்கு சற்று நேரத்திற்கு முன் தயாரித்து பயன்படுத்துங்கள்.
- இரவில் தூங்கச் செல்வதற்கு முன் 10 நிமிடங்கள் தியானம் செய்வதுடன் இனிய நாளொன்றை எமக்காக தந்த இறைவனிற்கு நன்றி செலுத்துங்கள்.
- இரவு உணவிற்கும்,தூங்குவதற்கும் குறைந்தது இரண்டு மணிநேரம் இடைவெளி எடுத்துக்கொள்ளுங்கள்.

"ஆரோக்கியம் தான் அனைத்துமாகும்"
"Health is Every thing"

# தமிழர்களின் வேதனையை கண் திறந்து பாருங்கள்

## அனைத்துலக சமூகத்திடம் கிழக்குப் பல்கலைக்கழகம் வேண்டுகோள்

(கொழும்பு)

தமிழர்கள் என்றுமே கண்டிராத பேரவலத்துக்குள் வாழ்கின்றனர். அதனை கண் திறந்து பாருங்கள் என அனைத்துல சமூகத்திடம் கிழக்கு பல்கலைக்கழக சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை கிழக்குப் பல்கலைக்கழக சமூகம் சார்பாக மாணவர்கள், நிர்வாகிகள், கல்விசாரா ஊழியர்கள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழர் தாயக நிலப்பரப்பு தற்போது வரலாறு காணாத ஒரு கொடிய போரை சந்தித்து நிற்கின்றது. வன்னியில் இன்று குறுகிய நிலப்பரப்பு ஒன்றில் தமிழ் மக்கள் சந்திக்கும் மனிதப் பேரவலமானது தமிழ் மக்கள் வரலாற்றில் என்றுமே சந்தித்திருக்காத ஒரு கொடிய அவ லமாக நாளுக்கு நாள் மாற்றம் கண்டு வரு கின்றது.

அங்கு எம் உறவுகள் சந்திக்கும் அவல வாழ்வையும், உண்மை நிலைமையினையும் சர்வதேச சமூகம் அறிந்திருந் தாலும் கூட அவர்களில் ஒரு தரப்பினர் இலங்கை அரசுக்கு சார்பாகவும் மறு தரப் பினர் மிகவும் அமைதியாக தங்கள் கருத்துக்களை இலங்கை அரசு மீது வெளிக்காட்டி வருகின்றனர். அக் கருத்துக்களை இலங்கை அரசு உள் வாங்கும் நிலையில் இல்லை என்பதோடு மட்டுமல்லாது, சர்வதேச அளவில் இலங்கையின் உண்மை நிலையினை எடுத்துக்காட்டுவதற்கு பலமானதாக இக்கருத்துக்கள் இல்லா திருப்பது எமக்கு மிகுந்த ஏமாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது.

சிறியதொரு சம்பவத்தைக் கூட முதன்மைப்படுத்தி வெளியிடும் சர்வதேச ஊட கங்கள் நாள்தோறும் நூற்றுக்கணக்கிலான மக்கள் உயிரிழக்கக் காரணமாக இருக்கும் யுத்தம் பற்றியும், பொருளாதாரத்தடை, உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு, குடிநீர்ப் பிரச்சினை, மருத்துவ வசதியின்மை அவைகளுக்கு அப்பால் பட்டினிச்சாவை சந்தித்திருக்கும் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான மக்களின் வாழ்வு கேள்விக்குறியாக நிற்கும் வேளையில் அம்மக்களின் உண்மை நிலையினை வெளிக்காட்ட இந்த சர்வதேச ஊடகங்கள் தயக்கம் காட்டுவது இலங்கை அரசின் படுகொலைக்கும் தமிழின அழிப்பிற்கும் மறைமுக ஆதரவு வழங்குவது போல் உள்ளது என்ற சந்தேகத்தினையும் எமக்கு தோற்றுவித்துள்ளது.

எம் உறவுகள் இன்று சர்வதேச நாடுகள் பலவற்றில் வாழ்கின்றனர். அதுமட்டு மல்லாது, தாங்கள் வாழும் நாடுகளில் வன்னியில் வாழும் தொப்புள் கொடி உறவுகளின் அவல வாழ்வையும் அம்மக்கள் இன்று சந்தித்து நிற்கும் கொடிய யுத்தத்தினையும் அம்மக்கள் மீது சர்வதேசம் கருணை காட்ட வேண்டும் என் றும் சர்வதேச நாடுகளிடமும், சர்வதேச அமைப்புக்களிடமும் கவன ஈர்ப்பு போராட்டங்களை மேற்கொண்டு மன்றாடி வருகின்றனர்.

இவ்வாறு நீண்டகாலமாக எம் மக்கள் அனைத்துலகத்திடம் விடுத்து வரும் வேண்டுதல்களுக்கு சர்வதேசம் கவனம் செலுத்தா திருப்பது மட்டில் நாங்கள் சந்தேகம் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் தமிழின அழிப்பின் பின்னால் சர்வதேசமே அணிதிரண்டு நிற்கிறதா? என்கின்ற மிகப் பெரிய சந்தேகத்தினை எங்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

மனித உரிமை பற்றியும், மனித நேயம் பற்றியும் பேசும் வல்லரசுகள் எங்களுக்காக பேச மறுப்பதன் காரணம் என்னவென்பது எங்களுக்கு புரியவில்லை.

வன்னியில் வாழும் பிஞ்சுகளின் நிலை கண்டும். செய்வதறியாது தவித்து நிற்கும் இளசுகளின் வாழ்வு குறித்தும், வாழ்க்கையின் இறுதிக்காலத்தில் கூட நிம்மதியான வாழ்வில்லாது ஏங்கும் முதியவர்களின் அவலம் குறித்தும் மறு நிமிடம் நாம் உயிரோடு இருப்போமா என்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் எம் மக்களின் அன்றாட அவல வாழ்வை எங்கள் உறவுகள் உலகின் பல பாகங்களிலும் வெளிக்காட்டிக் கொண்டிருக்கும் நிலையில் நாங்கள் எம் உறவுகளுக்காக ஒன்றையும் செய்ய முடியாத நிலையில் வாழ்கின்றோம் என்பதனை நினைத்து நாங்கள் கவலைகொள்கின்றோம்.

எம் உறவுகளுக்காக எங்கள் உணர்வுகளை வெளிக்காட்ட முடியாத நிலையில் நாம் உள்ளோம்.

எம் உறவுகளின் இன்னல்கள் கண்டு உணர்வுள்ள தமிழர்கள் தீக்குளித்து தங்கள் உயிர்களை மாய்த்து வரும் நிலையில், தங்களின் இரத்த உறவுகள் வன்னியில் வாழும் நிலை கண்டு கதிகலங்கியுள்ள இப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் மன உளைச்சலுக்கு உட்பட்டு தற்கொலை செய்யும் பரிதாபமும் இங்கு மிகவும் அமைதியாக அரங்கேறி வருகின்றது.

வன்னியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கொடிய போருக்கு எதிராக தங்கள் ஆதங்கங்களையும், எதிர்ப்புக்களையும் காட்ட முடியாத நிலையில் ஏற்கனவே இரு பல்கலைக்கழக மாணவிகளும், ஒரு பணியாளரும் தற்கொலை செய்துள்ளனர்.

இத்தனை உயிரிழப்புக்களுக்கும் கொடுமைகளுக்கும் க்ரணமாக இருக்கும் யுத்தத்தினை நிறுத்த சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என்பதோடு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும்.

இந்நிலையில், எம்மக்களின் உரிமையை மீட்க நாம் எடுத்துக்கொண்டுள்ள அத்தனை முயற்சிகளிலும் சளைக்காது தொடர்ச்சியாக அயராது உழைத்து வெற்றி காண நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்போம்! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

## கிழக்கில் மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டம்?

### அரசியல் விமர்சகர்கள் அச்சம்

(கொழும்பு)

அரசாங்கத்திலிருந்து தம்மையும் தமது கட்சி உறுப்பினர்களையும் விரட்டியடிக்க அமைச்சர் கருணா சதித்திட்டம் தீட்டி வருவதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது பிள்ளையான் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை ஓரங்கட்டும் நடவடிக்கைகளில் கருணா தீவிரம் காட்டி வருவதாக பிள்ளையான் பகிரங்கமாக குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிலைமை கிழக்கில் துணை இராணுவக் குழுக்களுக்கு இடையில் மீண்டுமொரு ஆயுதப் போராட்டம் வெடிக்கக் கூடிய அபாயத்தை ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் விமர்சகர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (ஓ-6)

## எரிபொருள் மானியம் பெறும் பொருட்டு சமுர்த்தி வங்கிகளில் வைப்புக் கணக்கு

சமுர்த்தி வங்கிகள் ஊடாக முச்சக்கர வண்டிகளுக்கு வழங்கப்படும் எரிபொருள் மானியத்தை பெறுவதற்காக 75 ஆயிரத்திற்கு மேற்பட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் வைப்புக் கணக்குகளை ஆரம்பித்துள்ளதாக சமுர்த்தி அதிகார சபை தெரிவிக்கின்றன.

வைப்புக் கணக்குகளை ஆரம்பித்துள்ள முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு சமுர்த்தி வங்கியூடாக மேலும் பல சலுகைகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஆர்.பி.வி. திலகசிறி தெரிவித்துள்ளார். குறைந்த வருமான முடையவர்கள் சார்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த வைப்புக் கணக்குகளில் முச்சக்கரவண்டி உரிமையாளர்களும் சுயதொழிலில் ஈடுபடுவோரும் உள்ளடங்குவதாக அவர் தெரிவிக்கின்றார். முச்சக்கரவண்டி உரிமையாளர்களுக்கு விசேட திட்டமொன்றை அமுல்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கான பிரேரணை இலங்கை மத்திய வங்கியிடம் சமர்ப்பித்து அதற்கான அனுமதி வழங்குமாறு கோரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். எவ்வாறாயினும் எரிபொருள் மானியத்தின் பலா பலனைப் பெறும் நுகர்வோரின் எண்ணிக்கை மிகக் குறைவென்றும் அவர் சுட்டிக்காட்டினார். இதனை முன்னிட்டு உள்ளூராட்சி மன் றங்களினால் அல்லது அரசாங்கத்தினால் புதிய திட்டங்கள் வகுக்கப்படுவது உகந்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-4)


## சேவை நலன் பாராட்டு

ஊர்காவற்றுறை வைத்தியசாலை யில் வைத்திய அதிகாரியாக
சிறப்பாக பணி யாற்றி 24.03.2009 அன்று இடமாறிச் சென்ற
*வைத்திய கலாநிதி அருணா புண்ணியமூர்த்தி*
அவர்களின் மகத்தான சேவையைப் பாராட்டி நீண்ட ஆயுளுட னும்
நல் வாழ்வுடனும் மேலும் சிறப்புடன் வாழ வாழ்த்தும்

தீவக மக்கள் சார்பில்
நா.கோபி கிருஷ்ணா

(2435)


# தேசிய கல்வியியற் கல்லூரி...

### ஆரம்பக்கல்வி

*(6ஆம் பக்கத் தொடர்ச்சி)*

எம்.சங்கீதா-மாதகல், எஸ்.ரூபினி-புலோலி மத்தி பருத்தித்துறை, என்.சசிகரன்-தெல்லிப்பளை கிழக்கு, பி.அனுசிகா-திருநெல்வேலி, எஸ்.சிவராமலிங்கம்-கரவெட்டி, ரி.சுகித்தா-நெடுந்தீவு தெற்கு, பி.கரிகாலன்-கோண்டாவில் மேற்கு, எஸ்.சுதர்சனா-கச்சேரி கிழக்கு, அரியாலை, ரி.பிறின்சியா-சர்வோதய வீதி , அச்சுவேலி தெற்கு, எஸ்.மாலதி-வல்வெட்டித்துறை, எஸ்.பிறேமலதா-கோண்டாவில் மேற்கு, ரி.அனுசூயா-பொற்பதி, குடத்தனை, எஸ்.நவரத்தினா-மானிப்பாய், கே.கவாஸ்கர்- குப்பிளாய் வடக்கு, ஏழாலை,

ரி.நடராஜா, அல்வாய் கிழக்கு, பருத்தித்துறை, கே.சுதர்ஜினி-சண்டிலிப்பாய், ஆர்.கோபினி-ராசாவின்தோட்டம் வீதி, எஸ்.சிவநந்தினி- கரணவாய் கிழக்கு, கரவெட்டி, எம்.டிவானா-றம்பைக்குளம், வவுனியா-எஸ்.கோகில்-நாவற்குழி தெற்கு, கைதடி, பி.மயூரதி-யாழ்.வீதி, ஏ.ரி.டி.றுக்ஷி-2ஆம் குறுக்குத்தெரு, எஸ்.துஷ்யந்தன்- அனலை தீவு, ரி.பகீரதி-இளவாலை, எஸ்.வசந்ததாசன், ஆனைக்கோட்டை, வி.நளினா- புலோலி மேற்கு, பருத்தித்துறை, கே.சர்மினி- வட்டுக் கோட்டை மேற்கு, பி.பிரஷாத் -அரசடிவீதி நல்லூர், எஸ்.ஏ.சோபியா-கீரிமலை, ரி.தாரணி-அரியாலை, ரி.அனுரேகா- கோண்டாவில், ஏ.அருமைநாயகம்- அரியாலை, ரி.கிருத்திகா-இமையாணன், உடுப்பிட்டி, ஆர்.மயூரிகா-கரவெட்டி கிழக்கு, எஸ்.பார்த்தீபன்-சாவகச்சேரி, கே.சுதாகரன்-வரணி, கொடிகாமம்.

எஸ்.அருணகிரிநாதன்-மணிக்கூட்டுவீதி, எஸ்.வயூரி-மூளாய், சுழிபுரம், எம்.சிவராசா-பலாலிவீதி, கே.விஜயகாந்தன்-நாவற்குழி தெற்கு, கைதடி, ஏ.சோபனா-சுன்னாகம் கிழக்கு, பி.கஜனி- பலாலிவீதி, கந்தர்மடம், பி.சுதர்சன்-எழுதுமட்டுவாள்தெற்கு, எஸ்நிஷானி -மட்டுவில் தெற்கு.

ஏ.அருள்வதனி-அல் லைப்பிட்டி, ஆர்.வஜீனா-ஊரெழு மேற்கு, சுன்னாகம், எஸ்.எம்.டயன்சலீன்-இருபாலை கிழக்கு, கோப்பாய், கே. திவியா-வல்வெட்டித் துறை, என்.இன்பராஜ்-சாவகச்சேரி, எம்.சந்திர மோகன்-கரணவாய்கரவெட்டி, ரி.ரூபினி-நாவலர் வீதி, நல்லூர், யு.உதயகுமாரன்-பருத்தித்துறை, ஏ.வி.றொனி-குருநகர், என்.மகேந்திரராஜா-அச்சுவேலி, எம்.ஜி.மரீன்- உயரப்புலம், ஆனைக்கோட்டை, பி.கீர்த்திகா-இணுவில் கிழக்கு, ரி.தர்சிகா-துன்னாலை மேற்கு, கரவெட்டி, வி.கே.தசிகரன்-வயாவிளான், ரி.குகநிதி-குப்பிளான் தெற்கு, ஏழாலை, ஏ.சுபர்ணவிழி- அச்சுவேலி தெற்கு, வி.லோஜினி-சரசாலை தெற்கு, சாவகச்சேரி, எஸ். துளாசினி-கொடிகாமம், இ.டலக்ஷனா-புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்றுறை, ரி.செலியா-சுன்னாகம், ஏ.யஸ்தினி-அல்லைப்பிட்டி, எல்.நிரோஜா-ஸ்ரான்லிவீதி, அரியாலை , எஸ்.சசிதரன்-கொழும்புத்துறை, ஜி.அருணகிரிநாதன்-ஆவரங்கால் மேற்கு, புத்தூர், வி.டயானா-நெடுந்தீவு மேற்கு.

வி.திரியாம்பிகை-நயினாதீவு, என்.சித்திரப்பிரியா-மீசாலை கிழக்கு, எஸ்.சுதாகரன்-புலோலி தெற்கு, பி.சுமிதா-சுழிபுரம், எஸ்.றொய்சிபாமினி-கிழக்குவீதி, யாழ்ப்பாணம், வி.நிலோஜன்-வேலணை கிழக்கு, ரி.டஜிதா-கீரிமலை, கே.பிருந்தா-மீசாலை வடக்கு, ரி.பிறேமராஜா-சுன்னாகம் தெற்கு, ரி.மஞ் சுளா-கந்தர்மடம், ரி.மைதிலி-புலோலி தெற்கு, ஏ.என்.ரமேஸ்காந்-பருத்தித்துறை, பி.சிவதர்சன்-திருநெல்வேலி, எம்.மனாஸ்வினி-உரும்பிராய் கிழக்கு, கே.குமாரசுவாமி -உடுவில் சுன்னாகம் , பி.குகனி-புலோலி வடமேற்கு, ஏ.சுபைதா-புலோலி கிழக்கு-பருத்தித்துறை.

எஸ்.ஆர்த்தி-பருத்தித்துறை, எஸ்.சுலக்சனா-தாளையடி, எஸ்.சண்முகநாதன் ஆனைக்கோட்டை, எம்.ஜனனி சண்டிலிப்பாய் மத்தி, என்.எச்.சிறோமோ-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம், கே.நிரோஜினி-உடுவில் மேற்கு சுன்னாகம், ஏ.இளங்கோ-தாளையடி.

பி.யூடிற்பாமினி-கரணவாய் கிழக்கு, கரவெட்டி, எஸ்.மயீபா-மிருசுவில், எல்.ஜெயராஜா-இமையாணன் உடுப்பிட்டி, ரி.கவிதா-மட்டுவில் தெற்கு, சாவகச் சேரி, எக்ஸ்.அஜந்தா-நாவாந்துறை, எஸ்.வினோஜா-பண்டத்தரிப்பு, கே.துஜிதா-மந்துவில் மேற்கு கொடிகாமம்.

யூ.கனகலிங்கம்-இமையாணன்மேற்கு உடுப்பிட்டி, ரி.றெஜினா-பூம்புகார் அளவை வடக்கு, பி.செந்தீபன்-பருத்தித்துறை, என்.தாரணி-வடலியடைப்பு, எம்.கமிஷ்ரா-குருநகர், எஸ்.றம்மியா- புங்குடுதீவு, எம்.பிரபாகினி-சிறுப்பிட்டி வடக்கு ,நீர்வேலி.

# அரசாங்கத்தால் சுமத்தப்படும் குற்றச்சாட்டு அடிப்படையற்றது

## கெயார் நிறுவனம் எதிர்ப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுககு ஆதரவான வகையில் செயற்படுவதாக அரசாங்கத்தினால் தமது அமைப்பு மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அடிப்படையற்றதென கெயார் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அண்மையில் மோதல் தவிர்ப்பு வலயத்தில் எறிகணைத் தாக்குதலில் உயிரிழந்த தமது நிறுவன பணியாளர் சபேசன் குறித்து இலங்கை அரசாங்கத்தின் விமர்சனத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தமது நிறுவனம் மனிதாபிமான சேவைகளை வழங்குவதனை முதன்மை நோக்காகக் கொண்டு இயங்கி வருவதாகவும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் தமக்கு தொடர்பில்லை எனவும் கெயார் நிறுவனத்தின் இலங்கை பணிப்பாளர் நிக் ஒஸ்போர்ன் தெரிவித்துள்ளார்.

கெயார் நிறுவனம் 1950ஆம் ஆண்டு முதல் இலங்கையில் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கெயார் தலைமையகப் பேச்சாளர் மெலானி புஷரூக்ஸ் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# வடக்கு மக்களின் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட வேண்டும்

## ஜனாதிபதியிடம் ஜோன் கெரி வேண்டுகோள்

(கொழும்பு)

வடக்கில் இடம்பெறும் போர் காரணமாக மோதல் பிரதேசங்களில் சிக்குண்டுள்ள மக்களைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அமெரிக்காவின் முக்கிய செனட்டர்களில் ஒருவரான ஜோன் கெரி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதுகாப்பு வலயங்களில் பொதுமக்கள் தாக்குதல்களுக்கு உள்ளாவது மற்றும் கொல்லப்படுவது பெரும் கவலையளிப்பதாகவுள்ளது.

பொதுமக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கை மேலும் தீவிரப்படுத்தப்பட வேண்டும். பொதுமக்கள் நிலைகள் மீது ஏறிகணைத்தாக்குதல் மேற்கொள்வதாக வெளியாகும் செய்திகள் பெரும் வேதனை அளிக்கின்றது. அரசாங்கம் யுத்தப்பிரதேசங்களுக்கு ஊடகவியலாளர்களையும் தொண்டு நிறுவன ஊழியர்களையும் அனுமதிக்காமை ஏற்றுக்கொள்ள முடியாது.

படையினர் விடுதலைப்புலிகளுடனான போராட்டத்தின் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளனர்.

இராணுவ நடவடிக்கைகள் முடிவுற்றதன் பின்னர் நாட்டில் விரைவில் அனைத்து இன சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான தீர்வுத்திட்டம் ஒன்றை மஹிந்த அரசாங்கம் முன் வைக்கும் என நாம் எதிர் பார்க்கின்றேன்.

இலங்கையின் நட்புறவு நாடு என்ற ரீதியில் வடக்கு நிலவரங்களை நாம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம் எனறார். (ச-5)

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி

## மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

யாழ். மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கி கிளை களில் 10.07.2008 ந்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 10.01.2008ந்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட் கப்படாதநகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத்திகதி இடம், நேரம் |
|---|---|
| யாழ். மேற்தரக்கிளை | யாழ்ப்பாண அதி மேற்தரக்கிளை யாழ்ப்பாணம் 2009 ஏப்ரல் 11ஆம் திகதி (சனி) காலை 9.30 மணிக்கும் |
| யாழ்.2ஆம் மேற்தரக்கிளை | |
| திருநெல்வேலி (கோப்பாய் விரிவாக்கற்கிளை உட்பட) | |
| காரைநகர் | |
| சுன்னாகம் | |
| மானிப்பாய் (சங்கானை விரிவாக்கற்கிளை உட்பட) | |
| காங்கேசன் துறை | |
| நெல்லியடி | |
| ஊர்கூாவற்றுறை (ஊர்காவற்றுறை விரிவாக்கற்கிளை உட்பட) | |
| பருத்தித்துறை | |
| சாவகச்சேரி | |
| அச்சுவேலி | |

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

தொலைபேசி இலக்கம் :-
021 222 3126
021 222 2735

உதவிப்பொது முகாமையாளர்
இலங்கைவங்கி (வடபிராந்தியம்),
உதவிப்பொது முகாமையாளர் காரியாலயம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/2225)



சாவகச்சேரி அமிர்தபாஷணி சமேத சந்திர சேகர வாரிவனநாத சிவன் ஆலயத்தில் திருவெம்பாவைக்காலத்தில் திருவாதவூரடிகள் புராணபடனம் நிறை வும், திருவாதிரை ஆருத்திரா தரிசனமும் நடைபெற்றது. இந்நிகழ்வில் சைவப் புலவர் ஐயப்பசாமி ரு.சுமுகலிங்கம், சைவப்புலவர் பௌராணிகர் எம்.சி.குல சிங்கம், பௌராணிகர் எஸ்.நவரத்தினம், ஓதுவார் ரி.கனகசிங்கம் ஆகியோர் புராணபடனக்காப்பு சொல்வதைப் படத்தில் காணலாம்.



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வணிக மாணவர் மன்றம் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்திய வணிக அறிவுப்போட்டியில் முதல் இடம் பெற்ற கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய மாணவி சபீனா சுவேந்திரன் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீட பீடாதிபதி க. தேவராஜாவிடமிருந்து தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ் பெற்றுக்கொள்வதைப்படத்தில் காணலாம்.



கச்சாய் அ.த.க.பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் க.கணேஷ்,நிக்கொட் அமைப்பின் பொறியியலாளர் சி.சசிகரன்,நிக்கொட் பிரதித்திட்டப்பணிப்பாளர் என்.எஸ். ஆர்.சிவரூபன், வித்தியாலய அதிபர் க.மங்களேஸ்வரன் ஆகியோர் வான்வாத்தியம் சகிதம் மேடைக்கு அழைத்துச்செல்லப்படுவதை படத்தில் காணலாம். (படம் :-சாவகச்சேரி நிருபர்)



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலயத்தில் நடத்தப்பட்ட சிவராத்திரி விழாவில் நாடகம், வில்லுப் பாட்டு,கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பரிசு பெற்ற மாணவர்களுடன் ஆலயப்பிரதமகுரு ,அபிவிருத்தி உதவியாளர் பிரதீஸ்வரன் சைவப்புலவர் நித்தியதசிதரன், பரமேஸ்வரன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

எப்பொழுதும் செய்ய முடிந்த காரியம் ஒருபொழுதும் செய்யப்படுவதில்லை.

– இங்கிலாந்து

வலம்புரி

# வெளியூர்த் தபால் வரவில் விசேட கவனம் தேவை

நாட்டின் அசாதாரண சூழ்நிலையில் நிர்வாக ஒழுங்கை மேற்கொள்வதில் பல்வேறு சிக்கல்கள் உண்டென்பது மறுக்க முடியாத உண்மை.

இருந்தும் மக்களுக்கான அத்தியாவசிய சேவைகளை வழங்க வேண்டிய அவசிய – அவசர தேவை உண்டென்பதும் மறுக்க முடியாத உண்மை.

அசாதாரண சூழ்நிலையில் மக்களுக்கான சேவைகளை வழங்குவதில் இருக்கக்கூடிய ஆத்ம திருப்தி எதிலுமே கிடைக்க மாட்டாதென்பதை அனுபவித்தவர்கள் ஏற்றுக் கொள்வர்.

அதேநேரம் எடுத்ததற்கெல்லாம். பத்திரிகைகள் எழுதுகின்றன என்ற குற்றச்சாட்டுக்களும் இதுவிடயங்களில் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் உண்டு.

இருந்தும் இவ்விடயத்தில் மக்கள் நலன்கருதிய பல விடயங்களை நாம் முன்வைத்திருந்தோம். அதில் பல விடயங்கள் அமுலாகி இருப்பது கண்டு அகமகிழ்ந்திருக்கின்றோம்.

எனினும் நாம் எழுதியதால்தான் அந்த விடயம் நடந்தே றியது என ஒருபோதும் உரிமை கோரியது கிடையாது. அது அழகுமன்று.

எந்த விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டனவோ அந்த விடயங்களை ஏற்றுக்கொண்டு அவற்றை அமுல்படுத்திய அதிகாரிகளே போற்றப்பட வேண்டியவர்கள்.

அவர்கள் மக்கள் நலன்சார்ந்து செயற்படுபவர்கள். அத்தகையவர்களுக்கு மக்கள் என்றும் நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும்.

அதேநேரம் அதிகாரிகளின் அர்ப்பணிப்புடன் கூடிய தூய பணிக்கு குந்தகம் விளைவிக்காமலும் பத்திரிகைகள் நடந்துகொள்வது கட்டாயமானதாகும்.

இதனடிப்படையில் வெளிமாவட்டங்களில் இருந்து அனுப்பப்படும் தபால் பொதிகளை கப்பல் மூலம் எடுத்துவருவதில் ஏற்படக் கூடிய கால தாமதம் குறித்து கவனமெடுக்கவேண்டிய தேவை உள்ளதென்பது ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய விடயமாகும்.

திருகோணமலையில் தேங்குகின்ற தபால் பொதிகளை பயணிகள் கப்பல் மூலம் அனுப்புவதில் யாழ்ப்பாண அதிகாரிகள் எதுவும் செய்ய முடியாது என்பது தெரிந்த உண்மை.

அதேநேரம் மிக இக்கட்டான சூழ்நிலையிலும் யாழ்.பிரதம தபாலகம் தபால் மற்றும் பார்சல் விநியோகத்தை திறம்பட ஆற்றி மக்களுக்குச் செய்த உதவி மறப்பதற்குரியதல்ல.

எனவே தபால் பொதிகள் தாமதமாகும் விடயத்திலும் உயர் மட்டத்தில் நடவடிக்கை எடுத்து வெளிமாவட்டத் தபால்கள் விரைவாக கிடைக்கச் செய்வதன் மூலம் நேர்முகப் பரீட்சை உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் மக்களுக்கு நன்மை பயப்பதாக அமையும்.

# மேல் மாகாணத்தில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளனர்

## பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு உட்பட மேல் மாகாணத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பதிவு நடவடிக்கையின் போது 8 ஆயிரத்து 571 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு இலட்சத்து 23ஆயிரத்து 722பேர் தம்மை பதிவு செய்து கொண்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்ச கருமான ரஞ்சித் குணசேகர தெரிவித் தார்.

வடக்கு –கிழக்கு மற்றும் மத்திய மாகா ணங்களில் இருந்து கடந்த 5 வருட காலப்பகுதியில் மேல் மாகாணத்திற்கு வந்து தற்காலிகமாகவும் நிரந்தரமாகவும் தங்கி யுள்ள இவர்களில் 315 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 63 பேர் அன்றைய தினம் புதிதாக தம்மை பதிவு செய்துள்ளனர்.

அத்துடன் அன்றைய தினம் பதிவுக்குட் படுத்தப்பட்டவர்கள் பொலிஸ் பதிவு தொடர்பில் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் தொடர்பிலும் கண்டறியப்பட்டதுடன் அதற்கான தீர்வுகளும் பொலிஸாரால் வழங்கப்பட்டன என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தொடர்ந்தும் கூறியதாவது,

வடக்கு –கிழக்கு மற்றும் மத்திய மாகா ணங்களில் உள்ள 11 மாவட்டங்களில் இருந்தும் கடந்த 2004ஆம் ஆண்டுக்குப் பின்னர் வந்த அனைத்துப்பொதுமக்களும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பதிவு நடவடிக் கைக்கு தம்மை உட்படுத்திக்கொண்டனர்.

இந்தப் பதிவின் போது பதிவுக்குட் படுத் தியவர்களில் பெரும்பாலானோர் மேல் மாகாணத்தில் தற்காலிகமாகத் தங்கியுள் ளனர் என்பது தெரியவந்துள்ளது.

இவர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் பல்வேறு கருமங்களின் நிமித்தமே கொழும்பு உட்பட மேல் மாகாணத்திற்கு வந்துள்ளனர் என்பது தெரியவந்தது.

இந்நிலையில் இவர்கள் உட்பட கடந்த 5 வருட காலப் பகுதிக்குள் நிரந்தரமாக வந்து தங்கியவர்களும் தம்மை பதிவு செய்து கொண்டனர் என்றார்.

(ஓ-6)

# இந்தியா அதிகாரப் பகிர்வு குறித்து அழுத்தத்தினை கொடுக்கவில்லை

## நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

அதிகாரப் பகிர்வே தேசிய பிரச்சினைக்கு தீர்வு என்ற வகையில் எந்தவொரு அழுத்தத்தையும் இந்தியா கொடுக்கவில்லை.

இந்தியாவின் தேவை ஏற்கனவே பூர்த்தியாகி விட்டது. இனி நாம் எந்த நாட்டுக்கும் பணியப் போவதில்லை. இலங்கை அரசின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கமையவே நாம் நடவடிக் கைகளை முன்னெடுப்போம் என்று சுகாதார மற்றும் போஷணை அமைச்சர் நிமால் சிறி பால டி சில்வா தெரிவித்தார்.


அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஆராய குழு ஒன்று உள்ளது. இவ்விடயத்தில் பாராளு மன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். இல்லை யேல் அதனை நிறைவேற்ற சர்வஜன வாக் கெடுப்புக்கும் செல்ல வேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் அமைச்சர் சொன்னார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேல் மாகாண சபைத் தேர்தல் பிரசார செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு மகாவலி நிலை யத்தில் நடைபெற்றபோது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்து பேசுகையிலேயே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார். மாநாட்டில் அமைச்சர் மேலும் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது,

கடந்த திங்கட்கிழமை இந்தியத் தூதுவர் எனது அமைச்சில் என்னை சந்தித்தார். இதன் போது தற்போதைய அரசியல் நிலை வரங்கள் தொடர்பில் கலந்தரையாடப்பட்டன.

இந்திய தூதுவருடனான சந்திப்பின் போதும் கூட இந்த விடயத்தைப் பற்றிய கலந்துரையாடல்கள் பேச்சுக்கள் எதுவும் இடம் பெறவில்லை.

வடக்கில் காயப்படுகின்ற மக்களுக்கான வைத்திய வசதிகள், வைத்தியசாலை மற்றும் மருந்து உபகரண வசதிகள் குறித்தே பேசப்பட்டது. இவ்விடயத்தில் இலங்கை அரசாங் கம் மேற்கொண்டு வரும் நடவடிக் கைகள் குறித்து திருப்தியும் மகிழ்ச்சியும் தெரிவித்தனர்.




அதிகாரத்தைப பகிர்வது தொடர்பில் எதுவுமே பேசப்படவில்லை. அதிகாரப் பகிர்வு விடயத்தில் நாம் ஏற்கனவே இந்தியாவின் தேவையைப் பூர்த்தி செய்து விட்டோம். அதனை மேலும் விரிவுபடுத்துவது தொடர்பில் எதுவுமே பேசப்படவில்லை. அதிகாரப் பகிர்வு விட யத்தில் நாம் ஏற்கனவே இந்தியாவின் தேவையைப் பூர்த்தி செய்து விட்டோம். அதனை மேலும் விரிவுபடுத்துவது தொடர்பில் ஆராய் வதற்காகவே தற்போது குழு ஒன்று அமைக்கப்பட்டு ஆராயப்பட்டு வருகின்றது.

இதன் அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றுக்கொண்டால் மாத் திரமே அதுவும் நடைபெறும். இல்லாவிட்டால் அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்புக்கும் செல்லும் நிலை ஏற் படும்.

எது எவ்வாறிருப்பினும் அதிகாரப்பகிர்வு என்ற விடயத்தில் நாம் எந்த சக்திகளுக்கும், அல்லது நாடுகளுக்கும் பணிந்து விடப் போவதில்லை. நாட்டின் தேசிய பிரச்சினை யைத் தீர்க்க வேண்டுமானால் அதற்கு அதி காரப் பகிர்வு அவசியம் என்றும், அதனை அமுல்படுத்துமாறும் கூறி இந்தியா எமக்கு எந்த ஒரு அழுத்தத்தையும் பிரயோகிக்க வில்லை என்பதை இங்கு பொறுப்புடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன் என்றார். (ஓ-6)

# கருணையின் வடிவு பகவான் பாபா

பகவானுடைய பிறந்தநாள் ஒன்றின் போது ஆயிரக் கணக்கான பக்தர்கள் கூட்டத்தில் அமெரிக்காவில் இருந்து வந்த திருமதி அன்ரர்சன் என்பவரும் ஒருவராவார். இவர் சில வருடங்களுக்கு முன்பதாக தனது இரண்டு கால்களும் இயங்காத நிலைக்கு ஆளானார்.



தனது கணவரின் உதவியோடு சக்கர நாற்காலியே தஞ்சம் என இருந்தார். விழா மண் டபத்தில் பகவானையே கண் ணுற்றவாறு சாயி நாமத்தோடு இயேசு பிரானை ஜெபித்துக் கொண்டிருந்தார். அவ்வேளை பகவானுக்கு எண்ணெய் சாற்றிக் கொண்டிருந்தனர் அடியார்கள். உடனே தனது தலையினை நிமிர்த்தி அண்டர்சன் இருந்த இடத்தை நோக்கி நகர்ந்தார். அவர் முன் சென்ற பாபா தனது தலையை குனிந்து கொண்டவராய் தனது தலையில் எண்ணெய் சாற்றச்சொன்னார்.

இயல்பாகப் பெருகியோடும் தெய்வீகக் கருணையையும் நோயில் வெளிறியிருந்த வெளிநாட்டு நோயாளிப்பெண்ணையும் அவர் முகத்தில் தோன்றிய ஆனந்தப் பரவசத்தையும் கண்ட மற்றைய அடியார்கள் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார்கள். மூன்று முறை எண்ணெய்த்துளிகளைத் தடவினார். அந்த அம்மையார் மூன்றாம் முறை தடவியபோது அவ் அம்மையாரின் கையைப்பிடித்த பாபா எழுந்து நில் என்று கூறினார். அம்மையாரும் எழுந்து நின்றார். அடியார்களின் வியப்பும் மகிழ்ச்சியும் அளவு கடந்து பெருகியது. "என்னோடு வா" என்று பாபா கூற அவரும் பகவானின் பின்னாலேயே எவ ருடைய உதவியுமில்லாமல் பாபாவின் ஆசனம் நோக்கிச் சென்றார்.

வருடக்கணக்கில் முடமாகி நடக்க முடியாதிருந்த திருமதி அன்டர்சனின் கால்கள் குணப்படுத்தப்பட்டுவிட்டன. பாபா எழுந்து நில் என்ற வார்த்தைகளே அவரின் கால்களுக்கு அந்தச் சக்தியைக் கொடுத்தது. இந்த நோயகற்றும் அற்புதத்தைக் கண்டு அங்கிருந்த அடியார்கள் ஒவ்வொருத்தரினதும் இதயம் ஆனந்தப் பரவசத்தை அடைந்தது. பாபாவின் பிறந்த நாள் பரிசாக உடல் நலத்தைத் திரும்பப் பெற்றார் அவ்வமெரிக்க அம்மையார். மனித குலத்தின் அழைப்புக்கிணங்கவே பகவான் இம் மண்ணில் அவதரித்துள்ளார். நன்மைகளுள் நாம் ஒருவ்ராக இருந்தால் பகவான் ஒரு போதும் எம்மைக் கைவிடமாட்டார்.

*ஜெய் சாயிராம்*

*யாதவன்*

# நாளை "வணங்காமண்" தாயகம் நோக்கிப் பயணம்

## ஏற்பாட்டாளர்கள் நிதியுதவி கோரியுள்ளனர்

(இலண்டன்)

வணங்காமண் கப்பல் எதிர்வரும் 27 ஆம் திகதி இலண்டனில் இருந்து தாயகம் நோக்கிப் புறப்படுமென்று வணங்காமண் இணையத் தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 14 ஆம் திகதி அளவில் இக்கப்பல் முல்லைத்தீவிற்கு கிழக்கான கடல் எல்லையை அடையுமென எதிர்பார்க்கப்படுவதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னி மக்களுக்கான பொருள் சேகரிப்பு பெரும் எழுச்சியாக இலண்டனில் நடைபெற்று வருகின்றது. பெருமளவு மக்கள் பொருட்களை வழங்கி வருகின்றார்கள். வணங்காமண் கப்பலில் மருத்துவர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்டவர்களும் வருகை தரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

புலம்பெயர் தமிழ் உறவுகளால் முன்னெடுக்கப்படும் மனிதாபிமான முயற்சியில் கடந்த சில நாட்களாக நடைபெறும் பொருட் சேகரிப்பில் தாம் எதிர்பார்த்ததை விட அதிகமான உணவுப் பொருட்கள் சேர்ந்துள்ளதாக வணங்காமண் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

ஆனால் குண்டு மழையினால் அல்லலுறும் மக்களுக்கு மிகவும் அத்தியாவசியமான சத்திரசிகிச்சை மருந்துகள் மற்றும் அதற்கான உபகரணங்கள் கொள்முதல் செய்ய பெருமளவு நிதி தேவைப்படுகிறது.

அத்தோடு கப்பல் செலவும் குறிப்பிடும் படியாக உள்ளது. "ஆகவே இந்த முயற்சியில் உலகத் தமிழர்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியுள்ளது" எனக் குறிப்பிடும் ஏற்பாட்டாளர்கள் நிதியுதவி கோரியுள்ளனர். (ஓ-6)

# மன்மோகன் - ஒபாமா ஜி - 20 இல் சந்திப்பர்

பிரிட்டனில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள ஜி 20 உச்சி மாநாட்டில் சந்திக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் இலங்கை உட்பட்ட தெற்காசிய பிராந்திய நிலைவரங்கள் தொடர்பாக பேசும் சாத்தியம் உள்ளதாக தெரியவருகிறது.

ஜி 20 உச்சி மாநாட்டுக்கு புறம்பாக இரு நாடுகளின் தலைவர்களும் சந்தித்துப் பேச விருப்பதாகவும் கல்வித்துறை, பங்குடைமை, உயர் தொழில்நுட்பம், காலநிலை மாற்றம், பொருளாதார உறவுகளை வலுப்படுத்துதல் என்பன இவ்விருவரின் பேச்சுக்களில் முன்னுரிமை வகிக்கும் என்றும் அகில இந்திய வானொலி செய்திச் சேவை கடந்த ஞாயிற்றுக் கிழமை தெரிவித்தது.

அத்துடன் உலகப் பொருளாதார நெருக்கடியால் தொழில் வாய்ப்புகளை இழப்போருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வது பற்றியும் ஆராயப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம், இலங்கை, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், பங்களாதேஷ் நிலைவரம் குறித்து இரு தலைவர்களும் ஆராய்வார்களெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (ச-5)

# வெளிநாடுகளில் புகலிடம் கோரும் இலங்கையர் எண்ணிக்கை அதிகரிப்பு

இலங்கையில் தொடரும் மோதல்களால் நாட்டிலிருந்து வெளியேறி வெளிநாடுகளில் புகலிடம் கோருபவர்களின் எண்ணிக்கை 2008 ஆம் ஆண்டில் 24 வீதமாக அதிகரித்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. 2008 ஆம் ஆண்டு புகலிடம் கோரிய இலங்கையர்களின் எண்ணிக்கை 12 வீதத்தால் அதிகரித்திருப்பதுடன் 51 நாடுகளிலிருந்து 3 இலட்சத்து 83 ஆயிரம் பேர் புகலிடம் கோரி கடந்த வருடம் விண்ணப்பித்திருப்பதாகவும் தெரிவித்திருக்கும் ஐக்கிய நாடுகள் சபை, ஈராக்கிலிருந்து மாத்திரம் 40 ஆயிரம் பேர் புகலிடம் கோரி விண்ணப்பித்திருப்பதாகக் கூறுகிறது.

சோமாலியா, ரஷ்யா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்தும் மோதல்கள் அதிகரித்துச் செல்லும் இலங்கை மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளிலிருந்தும் பெருமளவான மக்கள் புகலிடம் கோரி விண்ணப்பித்துள்ளனர். இலங்கையிலிருந்து 2008 ஆம் ஆண்டு 9 ஆயிரத்து 678 பேர் புகலிடம் கோரியிருப்பதுடன் 2007 ஆம் ஆண்டு 7 ஆயிரத்து 792 ஆகக் காணப்பட்ட இந்த எண்ணிக்கை தற்பொழுது மொத்தம் 17 ஆயிரத்து 470 ஆக அதிகரித்துள்ளது.

புகலிடம் கோரி விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கையில் கடந்த இரண்டு வருடத்தில் இலங்கை 12 ஆவது இடத்திலுள்ளது. கடந்த வருடத்தில் ஐரோப்பிய ஒன்றித்திலுள்ள 38 நாடுகளில் 13 ஆயிரத்து 903 பேர் புகலிடம் பெற்றனர்.


பெரும்பாலும் புகலிடம் கோருபவர்கள் அமெரிக்காவுக்குச் செல்வதற்கே கூடுதலாக விரும்புவதுடன் இதேவேளை, புகலிடம் கோரி விண்ணப்பிப்பவர்களில் 13 வீதமானவர்கள் அமெரிக்காவுக்கே செல்ல விரும்புகின்றனர்.

அமெரிக்காவுக்கு அடுத்ததாக கனடா, பிரான்ஸ், இத்தாலி, பிரித்தானிய ஆகிய நாடுகளுக்கே புகலிடம் கோரி மக்கள் செல்கின்றனர். 2007 ஆம் ஆண்டு கூடுதலாகப் புகலிடம் வழங்கும் இரண்டாவது நாடாகவிருந்த சுவீடன் தற்பொழுது புகலிடம் வழங்கும் எண்ணிக்கையைக் குறைத்துக் கொண்டுள்ளது. புகலிடம் வழங்கும் நாடுகளின் பட்டியலில் 17 ஆவது இடத்திலிருந்து நோர்வே 10 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. (ஓ-6)

# பாகிஸ்தான் தலைமை நீதிபதி இப்திகார் மீண்டும் பொறுப்பேற்பு

(இஸ்லாமாபாத்)

முஷாரப் அதிபராக இருந்த போது பதவி நீக்கம் செய்யப்பட்ட பாகிஸ்தான் தலைமை நீதிபதி இப்திகார் முகமது சவுத்ரி நேற்று முன்தினம் மீண்டுப் பொறுப்பேற்றுக் கொண்டார். பாகிஸ்தான் அதிபராக முஷாரப் இருந்த போது, தலைமை நீதிபதி இப்திகார் உட்பட 60 நீதிபதிகள் பதவி நீக்கம் செய்யப்படடனர்.



இதை எதிர்த்து வக்கீல்கள் நீண்ட நாட்கள் போராட்டம் நடத்தினர். கடந்த ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் பாகிஸ்தான் மக்கள் கட்சி - முஸ்லிம் லீக் கட்சி கூட்டணி அமோக வெற்றி பெற்றது.

இதையடுத்து முஷாரப் பதவி விலகினார். "பதவி நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகள் மீண்டும் பதவியில் அமர்த்தப்படுவார்கள்" என இந்தக் கூட்டணி சார்பில் வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால், அதிபராக பொறுப்பேற்ற ஆசிப் அலி சர்தாரி, இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் காலதாமதம் செய்து வந்தார்.

இதையடுத்து கூட்டணியிலிருந்து விலகிய பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி தலைவர் நவாஸ் ஷெரீப் சமீபத்தில் பெரிய அளவில் போராட்டம் நடத்தினார். நாடு முழுவதும் இதனால் பதட்டம் ஏற்பட்டது.

இதையடுத்து இப்திகார் உள்ளிட்ட நீதிபதிகள் மீண்டும் பதவியில் அமர்த்தப்படுவதாக பாகிஸ்தான் பிரதமர் கிலானி அறிவித்தார்.

இதையடுத்து இப்திகார் சவுத்ரி, மேல்நீதிமன்றுக்கு நேற்று முன்தினம் வந்து தலைமை நீதிபதியாகப் பொறுப் பேற்றுக் கொண்டார். முன்னதாக நீதிமன்ற வாசலில் காத்திருந்த ஏராளமான வக்கீல்களும், பொதுமக்களும் அவரை மலர் தூவியும் கைதட்டியும் வரவேற்றனர்.

அப்போது அவர் குறிப்பிடுகையில், "பாகிஸ்தான் நீதித்துறையில் ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன. வக்கீல்களாகிய உங்களது உதவியில்லாமல் இதை ஒழிக்க முடியாது. இந்த கோர்ட்டில் மீண்டும் சகஜ நிலை திரும்பியுள்ளதற்காக இறைவனுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். (ஓ-6)

# நண்பரின் சடலத்தை இரகசியமாக அடக்கம் செய்தவர்களுக்கு கட்டார் நீதிமன்றம் தண்டனை

தமது நண்பர் ஒருவரின் சடலத்தை இரகசியமான முறையில் அடக்கம் செய்த ஐந்து இலங்கையர்களுக்கு கட்டார் நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

2007 ஆம் ஆண்டில் அதிக மதுபோதையினால் நினைவிழந்து பின்னர் உயிரிழந்த தமது நண்பர் ஒருவரை குறித்த ஐந்து பேரும் பாலைவனப் பகுதியொன்றில் இரகசியமாக புதைத்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் ஈடுபட்ட ஐந்து பேரில் இருவர் ஏற்கனவே கட்டாரைவிட்டு வெளியேறி விட்டதாகவும், மூவர் தற்போது கட்டாரில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்டாரில் பணிபுரியும் மூவருக்கும் ஓராண்டு கால சிறைத்தண்டனை மற்றும் நாடு கடத்தல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கட்டாரை விட்டு வெளியேறிய இருவருக்கும் மூன்றாண்டுகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

20 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு அதிக போதையினால் உயிரிழந்ததாகவும், குறித்த இளைஞரின் சடலத்தை நண்பர்கள் இரகசியமான முறையில் புதைத்ததாகவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. உயிரிழந்தவர்களின் சகோதரர் மேற் கொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

உயிரிழந்த நபர் மதுபோதைக்கு அடிமையானவர் எனவும் அதிக மதுபோதையின் காரணமாகவே உயிரிழந்ததாகவும் மரண விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது. உயிரிழந்த மற்றும் தண்டனை விதிக்கப்பட்ட இலங்கையர்களின் பெயர் விபரங்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை. (ஓ-6)

# பலமான அரசும், தானே முடிவெடுக்கும் பிரதமரும் இருக்க வேண்டியது அவசியம்

## பா.ஜ.க. தலைவர் - அத்வானி

(மதுரா)

மன்மோகன் சிங் பலவீனமான பிரதமர் என பா.ஜ. மூத்த தலைவரும் அக்கட்சியின் பிரதமர் வேட்பாளருமான அத்வானி விமர்சித்துள்ளார். தேசிய ஜனநாயக கூட்டணியின் தேர்தல் பிரசாரத்தை உத்தர பிரதேச மாநிலம் மதுராவில் தொடக்கிய அத்வானி பேசியதாவது,

தற்போதைய ஆட்சியில் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் முக்கியத்துவம் இல்லை ; சோனியாவிற்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இது போன்ற நிலைமை எந்த நாட்டிலும் இல்லை. அதனால் தான், மன்மோகன் சிங் பலவீனமான பிரதமர் என நான் கூறுகிறேன். ஒருமுடிவை எடுக்க மன் மோகன் சிங் விரும்பினால் உடனே நம்பர் 10, ஜன்பத் இல்லத்திற்கு ஒரு அமைச்சரை அனுப்பி சோனியாவின் ஒப்புதலை கோருகிறார்.

நேருகாலம் முதல் பல பிரதமர்களை மிக அருகில் இருந்து பார்த்துள்ளேன். இருந்தாலும், மன்மோகன் சிங் போன்ற பலவீனமான பிரதமரை ஒரு போதும் பார்த்ததில்லை. தற்போதைய மத்திய அரசை மன்மோகன் சிங் அரசு என அழைப்பதற்குப் பதிலாக, சோனியாவின் அரசு என்றே அழைக்கலாம். சோனியா தான் அரசை நடத்துகிறார்

மத்தியில் பலமான அரசும் தானே முடிவெடுக்கும் பிரதமரும் இருக்க வேண்டியது அவசியம். உத்தர பிரதேசத்தில் இருப்பது போன்ற அராஜக அரசை அடக்க வேண்டும் எனில், இது அவசியம். மயாவதி அரசு ஊழல், நேர்மையின்மை, கிரிமினல் மயம் நிறைந்த அரசு இவ்வாறு அத்வானி பேசினார். (ஓ-6)



கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி

# மழையின் இன்னிங்ஸ் நேற்றும் தொடர்ந்தது

# நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று சென்.பற்றிக்ஸ் அடுத்த சுற்றுக்கு தகுதி

## ஏ.எம்.மனோஜ் அரைச்சதம் அடித்து கௌரவம்

(கண்டி)

கண்டி சென்.அன்ரனீஸ் கல்லூரி-யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டம் நேற்றும் மழை காரணமாக கைவிடப்பட்டது.

இதன் மூலம் தொடர்விதி முறைகளின்படி நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்றதன் மூலம் யாழ்.சென். பற்றிக்ஸ்கல்லூரி அணிகாலிறுதிக்கு முன்னேறியது.

இலங்கை பாடசாலை அணிகளுக்கிடையிலான மஞ்சி கிண்ண மட்டுப் படுத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்ட விலகல் முறையிலான கிரிக்கெட் தொடரின் முதல் சுற்று ஆட்டத்தில் கண்டி சென்.அன்ரனீஸ் கல்லூரி அணியும் யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின.

இப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்ற போதும் மழை காரணமாக ஒரு இன்னிங்ஸ்மாத்திரம்விளையாடிய நிலையில் ஆட்டம் கைவிடப்பட்டது.

இந்நிலையில் மீண்டும் ஆட்டம் கண்டி சென்.அன்ரனீஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கண்டி சென். அன்ரனீஸ் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் மற்றிங்ஆடுகளத்தில் பயிற்சி பெற்றயாழ்.சென். பற்றிக்ஸ்கல்லூரி அணியினர், புற்தரை ஆடுகளத்தில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 49 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 150 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பொறுப்பாக துடுப்பெடுத்தாடிய ஏ.எம்.மனோஜ் 52 ஓட்டங்களை எடுத்து அரைச்சதத்தை பூர்த்தி செய்ததுடன் எஸ்.மிலாண்டே ஜெனீபர் 13, அணித்தலைவர் எம்.ஏ.நிலோசன் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களையும் ரி.லவதீசன் 11 ஓட்டங்களையும் அதிக பட்சமாக எடுத்தனர்.

பந்துவீச்சில் ரணசிங்க 26 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் றியால் 17 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கெட்டிக்கே 29 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 151 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குக்கு துடுப்பெடுத்தாடிய கண்டி சென் அன்ரனீஸ் கல்லூரி அணி 12.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களையிழந்து 75 ஓட்டங்களை எடுத்த நிலையில் மழை குறுக்கீடு செய்து தொடர்ந்து பெய்ய ஆட்டம் கைவிடப்பட்டது.

இந்நிலையில் மஞ்சி கிண்ண தொடரின் விதிகளின் படி முதல் நாள் ஆட்டம் கைவிடப்பட்டால் மறுநாள் மீண்டும் நடத்தப்படும்.

இவ்வாறு 2 நாட்களும்ஆட்டம் முழுமையாக நடைபெறாத பட்சத்தில் விலகல் முறையிலான தொடர் என்பதால் மீண்டும் நாணயச்சுழற்சி போடப்பட்டு அதில் வெற்றி பெறும் அணி அடுத்த சுற்றுக்குத் தெரிவாகும்.

இதன்பிரகாரம் நாணயச்சுழற்சி போடப்பட்டது.

இதில் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்று கால் இறுதிக்கு முன்னேறியது.

இதற் கமைய நாளை யாழ். சென்.பற்றி க்ஸ் அணி காலி மகிந்த கல்லூரி யுடன் மஞ்சி கிண்ண தொடரின் காலிறு தியில் மோதுகின்றது.

# இந்தியா சாதனை படைக்குமா; பதிலடி கொடுக்குமா நியூசிலாந்து?

## இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

(நேபியர்)

நியூசிலாந்து-இந்திய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்று நேபியரில் ஆரம்பமாகிறது.

நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 2 இருபது - 20, 5 ஒருநாள் மற்றும் 3 டெஸ்ட்போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் இருபது - 20 தொடரை நியூசிலாந்து அணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியதுடன் ஒரு நாள் தொடரை இந்திய அணி 3:1 என்ற கணக்கில் சுவீகரித்தது.

இதனைத் தொடர்ந்து கடந்த வாரம் நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்நிலையில் இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்று நேபியரில் ஆரம்பமாகிறது.

இப்போட்டியில் வெற்றிபெற்றால் இந்திய அணி நியூசிலாந்து மண்ணில் புதிய வரலாறு படைக்கும்.

நியூசிலாந்து மண்ணில் 41 ஆண்டுகளுக்கு பின் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றி சாதனை படைக்க இந்திய அணி தயாராகவுள்ளது.

**துடுப்பாட்ட பலம்**

இந்திய அணியைப் பொறுத்தவரை துடுப்பாட்டத்தில் மிகப் பெரிய பலமாகவுள்ளது.

நட்சத்திர துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கர் முதலாவது டெஸ்ட்டில் முதல் இன்னிங்ஸில் 160 ஓட்டங்கள் குவித்து அசத்தியதுடன் ஆட்டநாயகன் விருதையும் வென்றார்.

இவருடன் இணைத்து துடுப்பாட்டத்தில் வலுச்சேர்க்க சேவாக், காம்பீர், லக்ஸ்மன், டிராவிட், தோனி, மற்றும் யுவராஜ் ஆகியோர் உள்ளனர்.

பந்துவீச்சில் சகீர்கான், இஷாந்த் சர்மா, முனாப்பட்டேல் வேகக் கூட்டணி நியூசிலாந்துக்கு சிம்ம சொப்பனமாக திகழ்கிறார்கள்.

ஹர்பஜன் சிங் சுழலில் மிரட்டி வருவது கூடுதல் பலம். இன்று ஆரம்பமாகும் போட்டி யில் இந்திய அணி வெற்றியை எட்ட அனைத்து அம்சங்களும் உள்ளன.

***நியூசிலாந்து தீவிரம்***

இரண்டாவது போட்டியில் இந்திய அணிக்கு பதிலடி கொடுக்க நியூசிலாந்து அணி தீவிரமாக தயாராகிறது. ரைடர்,விக்டோரி,மக்கலம் ஆறுதல் அளித்து வருகின்றன.

மில்ஸ், ஓபிறினின் ஆகியோரின் பந்துவீச் சும் இந்திய அணிக்கு அச்சுறுத்தலாக அமையவில்லை.

இருப்பினும் இம் முறை தவறுகளை திருத்திக் கொண்டு வெற்றியை எட்டுவோம் என நியூசிலாந்து அணித்தலைவர் டானியல் விக்டோரி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இன்று ஆரம்பமாகும் இரண்டாவது டெஸ்ட் போட்டி நடைபெறும் நேபியர் மக்லீன் பார்க் ஆடுகளம் துடுப்பாட்டத்திற்கு சாதகமாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இன்று ஆரம்பமாகும் டெஸ்ட் போட்டியில் வெற்றியைத் தமதாக்க இரு அணிகளும் சவாலாக விளையாடும் என்பதால் போட்டி விறுவிறுப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை.

## ஏப்பிரல் 18ஆம் திகதியே ஐ.பி.எல். ஆரம்பமாகும்

இரண்டாவது ஐ.பி.எல். போட்டிகள் தென்னாபிரிக்காவில் நடைபெறும் என்றும் ஏப்ரல் 17ஆம் திகதி போட்டிகள் ஆரம்பமாகும் என்றும் அதிகார பூர்வமாக அறிவிக்கப் பட்டிருந்தது.

எனினும் தற்போது இந்தப்போட்டிகள் ஏப்ரல் 18ஆம் திகதி ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மொத் தம் 59 போட்டிகள் நடைபெறும் என் றும் 22 நாட்களில் தினமும் 2 போட்டி கள் நடைபெறும் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

எல்லா அணிகளுக்கும் ஒவ்வொரு ஆட்டத்திற்கும் இடையே 2 நாட்கள் ஓய்வு வழங்கப்படுகிறது. தென்னாபிரிக்காவில் உள்ள 6 மைதானங்களில் போட்டிகள் நடைபெறும்.

போட்டிகள் இலங்கை நேரப்படி மாலை 4 மணிமற்றும் இரவு 8 மணிக்கு ஆரம்பமாகும். அதேவேளை போட்டிகள் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 44





சோதனைக் காலம்
முரளிக்கு ஆரம்பம்

சார்ஜா தொடரையடுத்து இலங்கை அணி, 1995ஆம் ஆண்டுடிசம்பர் மாதம் அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு சிங்கத்தை அதன் குகையிலேயே சந்தித்தது.

இதில் 2 டெஸ்ட் மற்றும் முக்கோண கிண்ண ஒரு நாள் தொடரிலும் இலங்கை அணி விளையாடியது.

இத் தொடர்முரளிதரனின் முதலாவது அவுஸ்திரேலியா தொடராக அமைந்தது.

அதுவும் அணித்தலைவர் அலன் போர்டர், ஸ்டீவ்வோ, மார்க்வோ, கில்கிறிஸ்ட் மற்றும் பல முன்னணித் துடுப்பாட்ட வீரர்களுடனான பலம் வாய்ந்த அவுஸ்தி ரேலிய அணியுடன் விளையாட பாலா முரளிதரன் தீவிர பயிற்சியில் ஈடுபட்டார்.

டெஸ்டில் அறிமுகமான போது அவுஸ்ரேலிய அணியைச் சந்தித்த முரளிதரன் சுமார் மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் இவ் அணியுடன் விளையாடுவதால் சவால் மிக்க தொடராக அமைந்தது.

முரளி தரனுக்கு ஆதரவாக அணித் தலைவர் அர்ஜீன ரண துங்க நம்பிக்கையளித்தார்.

இதனால் மன உறுதியுடன் அவுஸ்திரேலிய அணியை அதன் மண்ணில் வீழ்த்த வேண்டுமென்ற குறிக்கோளுடன் முரளிதரன் தொடரை சவாலாக எதிர்பார்த்து அவுஸ்திரேலியா பயணமானார்.

(பயணிக்கும்)

# எண் விளையாட்டு-49



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும்எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப் பட்டுள்ள எண்ணுக்கு சம மாகவர வேண்டும். இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக்கப்பட்டுள்ளது. 1 முதல் 9 வரையான எண்களை பயன் படுத்த வேண்டும். ஆனால் ஒருவரிசையில் பயன்படுத்திய எண்திரும்பவரக் கூடாது.

**நேற்றைய பகுதிக்கான விடை**



# நேற்றைய எறிகணைத்...

அத்துடன் மாத்தளன் பகுதியில் துப்பாக் கிச் சூடு மற்றும் ஆர்பிஜி உந்துகணைத் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

இதே பகுதியில் மாத்தளன் மருத்துவமனை உள்ளது. இந்த மருத்துவமனையே இப்பகுதியில் உள்ள ஒரே ஒரு தற்காலிக மருத்துவ மனை என்பதும் குறிப்பிடத்தக்கது. அதிகளவிலான தாக்குதல்கள் வலைஞர்மடம், அம்பலவன் பொக்கணை மற்றும் மாத்தளன் பகுதிகளில் நடத்தப்பட்டுள்ளன.

இப்பகுதியில் ஐந்து தடவைகள் வான்படை குண் டுத் தாக்குதல்களை நடத்தி யுள்ளது.

நேற்றைய தாக்குதல்களில் கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி 25 சிறுவர்கள் உட்பட 112 தமிழர்கள் படுகொலை செய்யப் பட்டுள்ளதுடன் 47 சிறுவர்கள் உட்பட 210 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. கொல்லப்பட்டவர்களில் இருவர் முல்லைத் தீவு அரசாங்க அதிபர் செயலகத்தின் பணியாளர்கள் என்றும் கூறப்படுகிறது.

முல்லைத்தீவு அரச செயலக பதிவாளரும் அலு வலகப் பணியாளருமான 52 வயதுடைய மரிய நாயகம் டெய்சி ராணி மற்றும் மாவட்ட செயலக உலக உணவுத்திட்ட நிவாரண வழங்கல் பதிவாளரான 27 வயதுடைய பரமேஸ்வரன் ஜெனோஜா ஆகியோரே படுகொலை செய்யப்பட்டவர்கள் ஆவர். கொல்லப்பட்ட ஏனையோரின் பெயர் விபரம் வருமாறு,

கந்தையா சுப்பையா (வயது 60),செல்லத்துரை (வயது 77), தினகரன் யாழியன் (5 1/2 மாதம்), பெரு மாள் ரவிக்குமாா (வயது 28),ரவீந்திரன் பிரியா (வயது 08), தம்பையா (வயது 74),பொன்னம்பலம் சிறீலக் சுமிரஞ்சன் (வயது 52),மாதவன் செல்லப்பா (வயது 65),தியாகராசா நிசாந்தன் (வயது 19), இராம கிருஸ்ணன் மேரி ஜெயசாந்தினி (வயது 09),தம்பு மயில் வாகனம் (வயது 82), பசுபதி சுதாகரன் (வயது 23), தம்பு சுப்பிரமணியம் (வயது 74),சந்தனம் காளி யரத்தினம் (வயது 59), நவரட்ணம் நேசமலர் (வயது 52),

கந்தையா சுப்பையா(வயது74), விக்கி கண்ணம் மா (வயது42), செல்வராசா ராசம்மா(வயது70), தவக்குமார் டிந்து(வயது09), மார்க்கண்டு சசிகரன் (வயது23), சத்தியமூர்த்தி கௌரியம்பாள் (வயது45), சாரங்கன் தாட்சாயினி(வயது12), வெள்ளைச் சாமி விதுசா(வயது07),நகுல்ராஜ் கிருஸ்ணரஜனி (வயது 35), பரமேஸ்வரன் ஜெயரஞ்சனி (வயது52), அமிர்த லிங்கம் டிலக்சன் (வயது10), இராசேந்திரன் பிரதீபன் (வயது29),மதனவசீகரன் பிரவீணா (வயது 03),

ஆறுமுகம் கலைவாணன் (வயது13),மருதமலை தமிழினியன் (வயது 5), முருகாண்டி நிதியின்பன் (வயது06), காளிதாசன் காவியன் (வயது07),மருதன் (வயது08), தேவசகாயன் கார்நிலா(வயது10), மலை யாண்டி குபேரன்(வயது14),கிருபைராசா குமாரி (வயது 33), தேவதாஸ் கார்திகாயினி (வயது15), ஏழுமலை கிருநாந்தி(வயது13), பார்த்திபராஜா பார்கவி(வயது 14),

தேவிதாசன் காவியா(வயது13),கதிரித்தம்பி இந்திரலிங்கம்(வயது 31),சர்வானந்தகரன் நிசாந்தினி (வயது24), சே.ருக்குமணி (வயது 52), மா.சசிக் குமார் (வயது23),சு.பாலசிங்கம் (வயது56), ந.சோனி யா(வயது18), ஆகியோ ர்உயிரிழந்துள்ளனர். ஏனை யோர் பெயர் விபரம் கிடைக்கப் பெறவில்லை. (ச-5)

# கஜேந்திரன்...

கழகத்திற்கு சென்ற இவர் தமது இருப்பிடம் திரும் பவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு பொலி ஸில் முறைப்பாடு செய்யச் சென்றிருந்த வேளை, வழியில் பாலமொன்றுக்கு அருகில் கைவிடப்பட்ட நிலையில் அவரது மோட்டார் சைக்கிள் கிடக்கக் காணப் பட்டுள்ளது என உறவினர்களிடம் இருந்து வெளியாகி யுள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

# ஹெலிகொப்...

உலங்கு வானூர்தியை பாதுகாப்பான இடத்திற்கு விமானி எடுத்துச் சென்றதாக விமானப் படைப் பேச் சாளர் விங் கொமாண்டர் ஜனக நாணயக்கார தெரி வித்துள்ளார். விடுதலைப் புலிகள் இவ் விமான எதிர்ப்பு ஏவுகணைத் தாக்குதலைப் பாதுகாப்பு வலயத்தில் இருந்தே மேற்கொண்டுள்ளதாக பாதுகாப்பு அமைச் சகம் தெரிவித்துள்ளது. (ச-5)

# கனரக...

தாக்குதல் நடத்த முயற்சித்து வருவதாகவும் அவர் கூறினார்.தேசிய ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக் கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொ டர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, வடக்கில் படை யினர் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தே இந்த வெற்றியை அண்மித்துள்ளனர்.தவிர இது தானாக வந்த வெற்றியல்ல. மோதல்களில் ஈடுபட்டு வரும் விடுதலைப் புலிகளுக்கு எவ் வகையிலோ ஆயு தங்கள் கிடைத்துள்ளன.

வன்னியில் தற்போது எஞ்சியுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் இராணுவத்தினர் இருக்கும் பகுதிக ளுக்குள் ஊடுருவி பலத்த தாக்குதல்களை நடத்தவே முயற்சித் து வருகின்றனர் என்றார். (ச-5)

# ஈழத்தமி...

அங்குள்ள நிலைமையை மேம்படுத்த உதவி செய்து வருகிறது. இந்திய அரசு முடிந்தவரை அழுத்தம் கொ டுத்து வருகிறது. இலங்கையின் நலன் கருதி அங் குள்ள தமிழர்களின் நலன் பாதுகாக்கப் பட வேண்டி யது மிக அவசியம் என கருதுகிறேன். இந்திய அரசு அதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறது என்றார் அவர். (ச-14)

# "அரசின் பாது...

உணவுவிற்குத் தான் கஷ்டம் எனப் பார்த்தால் நிம்மதியாக இருக்கவும் வழியில்லை. இங்கு பொருட் களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. அதிக விலை கொடுத் தே வாங்கவேண்டியிருக்கிறது. காயம் என மருத்துவ மனை சென்றால் மருந்து இல்லை. வீதிகளில் சென்று கொண்டிருக்கிறபோது ஷெல்கள் விழுகின்றன. பலர் உயிரிழக்கிறார்கள். மருத்துவமனையில் பராமரிப்ப தற்குக் கூட யாரும் இல்லை. ஒருநேர சாப்பாட்டிற்கே வழியில்லாமல் அந்தரிக்கிறோம். அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வர எங்களுக்குச் சந்தர்ப்பம் இல்லை.

வரச் சொல்லிக் கூப்பிடுகிறார்கள். அவர்களே சுடு கிறார்கள். நீங்கள் நேரில் வந்து பார்த்தால் தான் இங் குள்ள நிலைப்பாடு தெரியும். இறந்தவர்களது உடலங் களை உறவினர்கள் பார்க்க முடியாத நிலையில் புதைக்கப்படுகின்ற நிலையே இங்கு காணப்படுகிறது என்று புதுமாத்தளனிலுள்ள பொதுமக்கள் சிலர் பி.பி.சிக்குத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவில் போர் நடக்கும் பிர தேசத்தில் நடைபெற்ற தாக்குதல்களில் நேற்றும் பல பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வரதராஜா பி.பி.சிக்குத் தெரிவித்துள்ளார். (ச-5)

# உதயன்...

தாக்குதலால் அலுவலகத்தில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தரான எஸ். செனரத் (வயது 40) காயமுற்றார். அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இத் தாக்குதலில் உதயன் பிரதம ஆசிரியரின் அறைக் கண்ணாடிகள் உடைந்து சேதமடைந்தன. இச் சம்பவத்தையடுத்து அங்கு உடன் விரைந்த பொலிஸாரும் இரா ணுவத்தினரும் விசாரணைகளை மேற் கொண்டனர். அதன் தொடர் நடவடிக்கையாக நேற்று 25ஆம் திகதி புதன்கிழமை காலை யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லலித் பிரேமரத்ன தலைமையிலான பொலிஸ் குழுவினர் சம்பவ இடத் தில் விசாரணைகளை நடத்தினர்.

இதேவேளை யாழ். சிவில் நிர்வாக அதிகாரி மேஜர் நிசங்கவும் நேரில் வந்து விசாரணை செய் தார்.

விசேட பொலிஸ் குழுவினர் காலையில் விசார ணைகளை மேற்கொண்டதுடன் குண்டு வீழ்ந்து வெடித்த இடத்தில் சோதனைகளையும் மேற்கொண்டனர். சோதனையின்போது மீட்கப்பட்ட குண்டுச் சிதறல் களை அவர்கள் எடுத்துச் சென்றனர் என்றுள்ளது. (ச)

# அதிகாரப் பரவலாக்கலுக்கு...

இது தொடர்பாக முதலமைச்சர் கருணாநிதிக்கு பிரதமர் மன்மோகன் சிங் எழுதியுள்ள கடிதத்தில் கூறி யிருப்பதாவது, இலங்கையில் நடைபெற்றுவரும் நிகழ் வுகள் குறித்து நீங்கள் கடந்த மாதம் 22ஆம் திகதி எழுதிய கடிதம் என்னை மிகவும் பாதித்தது.

இலங்கையில் நடந்துவரும் சண்டையில் ஆயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் துரதிர்ஷ்டவச மாக தங்கள் உயிர்களை இழந்து வருவது வேதனை அளிப்பதாகவும் மேலும் சண்டைப் பகுதிக்கு வெளி யில் தற்காலிக முகாம்களில் தங்கியிருக்கும் ஆயிரக் கணக்கான மக்களின் நிலைமை குறித்தும் தாங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். இது தொடர்பாக இலங்கை அதி காரிகளுடன் பல்வேறு மட்டத்தில் தொடர்ந்து பேசி வரு கிறோம்.

நமது வெளியுறவுச் செயலர் அண்மையில் கொ ழும்பு சென்று அந்நாட்டு வெளியுறவுச் செயலாளர், பாதுகாப்புச் செயலாளர், இலங்கை அதிபரின் செய லாளர் ஆகியோரைச் சந்தித்து பேசினார். இலங்கை அதிபரையும் அவர் சந்தித்தார்.

அப்போது தமிழர்கள் படும் அவதி குறித்து தமது கவலையை அவர் தெளிவாக விளக்கினார். மேலும் தமிழர்களின் பாதுகாப்பு, மருத்துவ வசதிக்காக கள மருத்துவமனை அமைப்பது உள்ளிட்ட யோசனைக ளையும் அவர் தெரிவித்துள்ளார். இதனை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டது.

அதன்படி சண்டைப் பகுதியிலிருந்து வெளியே றும் மக்களுக்காக கள மருத்துவமனையொன்றும் அமைக்கப்பட்டு அது சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இலங்கை அரசுடன் மத்திய அரசு நடத்திய பேச்சு வார்த்தைகளில் அப்பாவி தமிழ் மக்கள் போர் நடக் கும் பகுதியிலிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங் களில் தங்குவதற்கு வசதியாக தற்காலிக போர் நிறுத் தம் செய்ய வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

பாதுகாப்பு வலய பகுதிகளில் மறுவாழ்வுப் பணி கள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நமது வெளியு றவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி இது தொடர்பாக கடந்த மாதம் 28ஆம்திகதி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் இதர மக்களுக்கு இணையாக உரிமைகள் அளிக்கப்படவேண்டும் என்றும் தமிழர் வசிக்கும் பகுதிகளில் சம உரிமை அளிக்கும் வகை யில் அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்றும் இலங்கை அரசை வலியுறுத்தியிருக்கிறோம். இதனை இலங்கை அதிபரும் ஏற்றுக்கொண்டு தமிழர் களின் முழுத் திருப்திக்கு ஏற்ப அதிகாரத்தை பகிர்ந்த ளிக்க உறுதியளித்திருக்கிறார்.

மேலும் இதற்கான நடவடிக்கைகளை அவர் தொ டங்கியிருப்பதாகவும் கூறியிருக்கிறார். என்ன நடவடிக் கைகள் எடுக்கப்படுகிறது என்பதை நாம் பொறுத் திருந்துதான் பார்க்கவேண்டும்.

தாங்கள் பூரண நலம் அடைந்து வருகிறீர்கள் என நம்புகிறேன். உங்களது சேவைகள் இந்தியாவுக்கும் தமிழ் நாட்டுக்கும் மேலும் பல ஆண்டுகள் நீடிக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை அண்மையில் நடந்த அறுவைச் சிகிச்சைக்குப் பின்பு நான் எனது பணிக ளைத் தொடங்கியிருக்கிறேன் இவ்வாறு அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ச-5,14)



Sun Micro Systems இன் நேரடி சான்றிதழ்
Sun Certified Java Programmer
பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில்
புதிய பிரிவு ஆரம்பம் 28.03.2009 07.30AM
இவ்வருடத்தில் இப்பிரிவு மட்டுமே கணனி துறைசார்ந்த பலரும் சர்வதேச தொழிற்சந்தைக்கேற்ப தகமைகள் பெற தவறி விடுகின்றனர். நீங்கள் உலகின் முன்னணி நிறுவனத்தின் அங்கீகாரத்தைப் பெறுங்கள்.
JAVA
MCS
Supported By UNDP/JRRP
324, பலாலி வீதி யாழ்ப்பாணம்

விற்பனையாகிறது SPEED MARKETING
புலமைப் பரிசில் -2009 -2010
பனரச Bag — மொழிப்பேழை
பரீட்சை தொடர் Bag — புலமைப் பேழை
புலமை ஒளி — புலமை வழி
வெற்றி முரசு — அமுதசுரபி
வெற்றிக் கனி — அடிப்படை அறிவு
அன்னை புத்தகசாலை
இல-7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 9881
(2229)

உயர் கல்விக்கான சரியான ஆங்கிலம்
(Formal English for academic Purposes)
கற்பதற்கான அனுமதிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.
28.03.2009 காலை 10 மணிமுதல் மாலை 1 மணிவரை நேரில் வரவும்.
04.04.2009 அன்று வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
ANVIL
The seat of formal English
ARASADY AMMAN VEETHY, THIRUNELVELY NORTH.
(2430)


# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை இராசரத்தினம்



(ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை, வல்வெட்டித்துறை)

15-ம் கட்டையடி, உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராசரத் தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) 25.03.2009 நேற்று புதன்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சீதேவன் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ் சென்ற பாக்கியத்தின் அன்புத் துணைவரும் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர்) இன் சகோதர ரும் தயாழினி(கனடா), இன்பநிதி, கமலநாதன் (கனடா), கேதீஸ்வரன்(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கதிர் காமநாதன் (கனடா), சித்திரவேல் (சிரேஷ்ர தொழிநுட்ப அதி காரி, R.D.A. பருத்தித்துறை), ரோகினி (கனடா), அனுசியா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்வன், கவிதா, கோகிதா, கேமலதா, தர்மதா, சஞ்ஜெய், சர்மிலன், ரோஹ ணா, நிரோசன், பானுசன், அனுஷன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26.03.2009 (வியாழக் கிழமை) இன்று பி.ப. 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கரம்பாவாளி மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

15-ம் கட்டையடி,
உடுப்பிட்டி.

தகவல்
தி.சித்திரவேல்,
மருமகன்.

(2445)



திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்
தவக்கால ஆற்றுகை
கல்வாரி யாகம்
(திருப்பாடுகளின் காட்சி)
காலம் : மார்ச் 29, 30, ஏப்பிரல் 01,02,04,05 – 2009
(ஞாயிறு, திங்கள், புதன், வியாழன், சனி, ஞாயிறு)
நேரம் : மாலை 6.00 மணி
இடம் : திருமறைக் கலாமன்ற அரங்கு
பார்வையாளர்கள் ஆசனங்களுக்கான பதிவுகளை யாழ் திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்
இறைமகனின் பாடுகளின் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
238, பிரதான வீதி,யாழ்ப்பாணம்.
T.P./Fax: 021 222 2393
திருமறைக் கலாமன்றம்
(C-2227)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.